தென்மொழி

சிங்கள இனமே! சிங்கள இனமே!

எந்தமிழ் இனத்தார் இந்நில வுருண்டையில்
எந்தப் பகுதியில் இருந்தாலும்—அவர்
சொந்தம் நமக்கே! நாமவர்க் கென்றும்
சொந்தம் சொந்தம் என்றுரைப் போம்!
உந்தும் உணர்வும் உறவும் அவர்பால்
உண்டுண் டென்றே முழக்கிடுவோம்!—அவர்
சிந்தும் கண்ணீர், செந்நீர் எதற்கும்
சீறி எழுந்தே வழக்கிடுவோம்!

ஈழத் தமிழ்க்குலம் சிங்கள ரால்உறும்
இடர்கள், இழிவுகள் நினைந்திடுவோம்!—அவர்
வாழத் துடித்தும் வறுமைப் பட்டும்
வடிக்கும் நீரில் நனைந்திடுவோம்!
ஆழக் கடலும் அரசுப் பிரிவும்
அவர்க்கும் எமக்கும் தடையில்லை!—எம்
வேழப் பெருந்தோள் எழுந்தால், தமிழர்
வெற்றி நடைக்கெதிர் நடையில்லை!

சிங்கள இனமே! சிங்கள இனமே!
சிறுமை செய்தாய் தமிழினத்தை!—நீ
இங்குள தமிழரை எண்ணிலை போலும்!
எங்குள ராயினும் செந்தமிழர்
பொங்குணர் வுக்கடல்! புகையும் எரிமலை!
போழ்வாய் அரிமா! பொருகளிறு!—அவர்
வெங்குரு தித்துளி ஒன்றிருக் கும்வரை
வீழ்ச்சியி லாதது தமிழினமே!

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

சுவடி: 14.
ஓலை: 5, 6.
விலை: உரு 1.

நமக்கு வந்த மடல்கள்.

0:539 தனித்தமிழ்ச் செல்வ! வணக்கம். 'முதலமைச்சர்க்குத் தென்மொழியின் முதல் வேண்டுகோள்' தமிழரசை வேண்டிக் கொள்ளவேண்டிய அமைச்சுவுரை–அறிவுரை–நெறிமுறை–அறவுரை எனவே தகும். 'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை' எனும் தென்மொழி, வேண்டி நிற்பது யாது கருதியோ? நடந்தொழிந்த கொடுங்கோலின் இழிநோக்கையும் இழி செயல்களையும் இனங்காட்டிய தென்மொழிக்குத் தமிழக அரசே நன்றிக் கடப்பாடு உடைத்து.

தமிழகத்தின் உண்மை வரலாற்றுக் கருவூலமாய் ஒளிரும் பேராசிரியர், புலவர். கோ. தங்கவேலு அவர்களின் 'தமிழ்நில வரலாறு' என்ற செந்தமிழ் நூலுக்கு இடப்பட்ட தடையையும், தாய் மொழி, இன நாட்டுப்பற்றை நீக்க, இளைய தலைமுறையின் பாட நீக்கத்தின் கெடு செயலையும் தென்மொழி இடித்துரைத்த பான்மை, இனிய தமிழ் நெஞ்சங்களை விழிப்புறச் செய்யும்; மாற்றார் நஞ்சு உள்ளங்களை நடுக்குறச் செய்யும் என்பது உறுதியே.

''அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்'' என்ற சிலம்பின் உண்மை, இந்திய அரசியலின் பட்டறிவு! எனவே, தென்மொழியின் அறவுரை (வேண்டுகோள்)யை, தமிழின், தமிழினத்தின் கட்டளையென ஏற்று விரைவில் உரிய வினையாற்ற முனைவது முதலமைச்சரின் முழுமுதற் கடமையுமாகுமன்றோ? மொழி உயர இனம் உயரும்! —வழக்குரைஞர்—கோ. தேவராசன், அறி.இ, ச.இ.

0:540; அன்புடையீர், வணக்கம். பல்வகை இடர்பாடுகளுக் கிடையில் ''தென்மொழி'' பீடுநடையிட்டு வருவது குறித்து மிக்க மகிழ்ச்சி. தூய தமிழ் நடையோடு-பிற மொழிக்கலப்பினைக் களைந்து–தமிழ்மொழி வளர்ச்சி ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு வெளிவரும் ஒரே ஏடு தென்மொழிதான். தமிழ் இனத்திற்கு எங்கே இன்னல்கள் இழைக்கப் படுகிறதோ—எங்கே உரிமை பறிக்கப் படுகிறதோ—அங்கே எல்லாம் தமிழர்களுக்காகத் துணையாக வருவது தென்மொழிதான். தமிழர்களிடையே தன்மான உணர்வு சிறிதேனும் இருக்கிறதென்றால் அது தங்களின் பாடல்களின் வாயிலாகவும்—ஆசிரியவுரைக் கருத்துகளின் மூலமாகவும் பெற்றதே ஆகும்.

தென்மொழி மட்டும் வரவில்லை என்றால் இன்றைய இளைஞர் கட்கு, நம்மின உணர்வும் அற்றுப் போயிருப்பதோடு, நம்மினப் பெருமையும்—நம் தாய்மொழித் தமிழின் சிறப்பும் அறியப்பெறாமலே போயிருக்கும். உண்மையாகவும், உறுதியாகவும் கூறுகிறேன். என்னுள்ளே தமிழ் உணர்வையும், தமிழ் இன உணர்வையும் என் குருதியுள்ளே கலக்க வைத்தது தங்களின் எழுத்துகளேயாகும். என்போன்ற ஆயிரமாயிரம் உள்ளங்களைப் பக்குவப் படுத்தியது தங்களின் வெற்றியேயாகும். அதனாற்றான், தாங்கள் சுணங்காது—தளராது மேன்மேலும் எங்கட்கு ஊக்கம் அளித்து—தலைமை ஏற்று நடத்தினால் சிதறுண்டு கிடக்கும் தமிழ் உணர்வுடையோர் ஒன்று பட்டுச்செயலாற்ற இயலும். நல்ல தலைவர் இருப்பாரேயானால் அவர் பின்னே அணி திரள்வது ஒன்றும் கடினமானதன்று. தங்களைப் போன்ற அறிவும், ஆற்றலும் துணிவுமுடைய தலைவர் எங்கட்கு கிடைத்திருக்கும்பொழுது நாங்கள் எழுச்சியோடும், ஒற்றுமையோடும் எழுந்து விட்டோம். வழி நடத்திச் செல்வது தங்கள் பணி.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

நெஞ்சை உருக்கும் நிலை.

நெஞ்சை உருக்குதடா!—நம்
நினைவைக் கருக்குதடா!—ஒரு
பஞ்சைப் பழுதென, ஈழ நிலத்தினில்
பைந்தமிழ்த் தாயினம்
அஞ்சி வாழும் நிலை (—நெஞ்சை)

கெஞ்சி மருகுகின்றார்—கொடுங்
கேட்டில் கருகுகின்றார்!—'த்சொ'
கொஞ்சமோ துயர்! எஞ்சுமோ உயிர்!
குடிமைத் தமிழினம்
மிடிமைப் படும்நிலை (—நெஞ்சை)

கூறுகூ றுய்ப்பிரிந்தார்—பல
குடும்பங்க ளாய்க் கரிந்தார்!—அட,
ஆறுமோ துன்பம் தீருமோ என
ஆண்ட தமிழினம்
மாண்டு வரும்நிலை (—நெஞ்சை)

குலைக்குள் வெயர்த்ததடா!—நம்
குடர்க்குள் சிலிர்த்ததடா!—படு
கொலைக்கும் புலைக்குமாய் அலைக்கப் பட்டே,உயர்
கொற்றத் தமிழினம்
செற்றப் படும்நிலை (—நெஞ்சை)

ஏழ்மைத் தொழிலாளர்—மலை
ஏறும் உழைப்பாளர்—இனி
வாழ்வா இல்லை உயிர் வீழ்வா எனும்படி
வாய்மைத் தமிழினம்
நோய்மைப் படும் நிலை (—நெஞ்சை)

அழிவுக்குள் ளாகினரே!—ஓ!
ஆதர வற்றனரே!—பல
இழிவும் இழப்புமாய் ஏதிலி யாய்விட்ட
ஈழத் தமிழினம்
வாழத் தகாநிலை (—நெஞ்சை)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர் நின்றே!

சுவடி : 14 ஓலை : 5-6.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

இலக்கிய இதழ்

மடங்கல்-கன்னி தி. பி. ௨௦௦௮-செப்-அக்-1977.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

ஆசிரியர் : மா. பூங்குன்றன். அறி.இ. (க.மு.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

இலங்கையில் தமிழர்க்கு நேர்ந்து வரும் கொடுமைகள்- ஓர் இன அழிப்பு முயற்சியே!

““தென்திசையைப் பார்க்கின்றேன்; என் சொல்வேன்? என்றன், சிந்தையெலாம் தோள்களெலாம், பூரிக்கு தடடா!"—என்று பாவேந்தர் பாரதிதாசன், 'அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத்தமிழன்' — இராவணனை நினைந்து பூரித்துப்பாடி, அவனை 'என் தமிழர் மூதாதை,' 'என் தமிழர் பெருமான்'—என்று வாயார வாழ்த்துவார். இங்ஙன் தமிழர் மூதாதை வாழ்ந்த நாடு இலங்கை! வரலாறு தெரியாத மிகப்பழங் காலத்திலிருந்து, வழிவழியாக வரும் செவிவழிச் செய்திகளின்படி, இலங்கை தொடக்கக்காலத்தில் மால்யவந்தன், குபேரன் என்னும் இயக்கர்களால் ஆளப்பெற்றதென்றும், அவர்களிடமிருந்து அதனை இராவணன் வெற்றி கொண்டு ஆண்டான் என்றும் கூறப்பெறுகிறது. அந்த வகையில் அது மிகப்பழந்தமிழ்நாடு. அதன் பின்னர் இராவணன் ஆண்ட இலங்கை, தன் பரப்பில் மிகக்குறுகி, இப்பொழுது—தென் வடலாக $271\frac{1}{2}$ கற்களும், கீழ் மேலாக $137\frac{1}{2}$ கற்களும், சுற்றளவாக

760 கற்களும், உள்ள ஒரு சிறு தீவமாய் (இந்தியாவிற்குத் தென் கிழக்கில்) 36 கற்கள் தொலைவில் உள்ளது. (சில இடங்களில் அதன் இடைத்தொலைவு 20 கற்களாகவும் உள்ளது.) ஆனால் நமக்குத்தெரிந்த வரலாற்றின் அடிப்படையில் கி.மு. 543-க்குப்பின், வங்க அரசன் ஒருவனுக்கும் கலிங்கப்பெண் ஒருத்திக்கும் பிறந்த கலப்பினப் பெண் ஒருத்தி தன் பெற்றோர் வைத்த சிறையினின்று தப்பி வெளியேறிய வழியில், சிங்கன் என்ற நாகரிகம் பெருத காட்டினக் கீழ்மகன் ஒருவனைச் (சிங்கத்தையன்று) சேர்ந்து பெற்றெடுத்த சிங்கவாகு என்பானின் மகன் விசயன் இலங்கை வந்து, அதன் மேற்குக் கரையோரத்தில் உள்ள புத்தளத்திற் கருகிலுள்ள தம்பனை என்னும் ஒரு பட்டினத்தை உருவாக்கிப் படிப்படியாய் தன் ஆளுமையைப் பெருக்கி இத்தீவிற்குத் தன் முன்னோர் பெயரால் சிங்களம் என்று பெயர் வைத்தான் என்று அறியப்பெறுகிறோம். சிங்களம் என்று பெயர் வைப்பினும் இலங்கை என்னும் தமிழ்ப் பெயரே அன்றிருந்து இன்று வரையிலும் வழங்கி வருகிறது.

ஒன்பான் மணிகளும் இலங்கித்(ஒளிர்ந்து)தோன்றும் தீவாகலின் இலங்கை யென்றும், பொன் (ஈழம்) விளைந்து பொலிந்த நாடாகலின் ஈழநாடு எனறும், செல்வமுள்ள இடமாதலின் தனச்சேரி என்றும் திபுராவனம் என்றும், சிங்கவாகுவின் பெயரால் அமைந்த நகராகலின் சிங்களம் என்றும், அது மருவிச் சிலோன் என்றும், யாழ்வல்ல பாணன் ஒருவனுக்குக் கொடையளிக்கப் பெற்றதாகலின் யாழ்ப்பாணம் என்றும் இத்தீவு பலவாறாக அழைக்கப்பெறும். எவ்வாறிருப்பினும் இலங்கை, ஈழம், யாழ்ப்பாணம் என்னும் தூய தமிழ்ப் பழம்பெயர்களே பெருவழக்காக வழங்குகின்றமையால், இந்நாடு தமிழர்களின் தொன்மை நாடே என்பது உறுதியாகப் பெறப்படும். கி.மு. 204-இல் இத்தீவு முழுவதையும் ஏழாலன் (இக்கால் இப்பெயரை 'எல்லாளன்' என்று திரித்து வழங்குவர்) என்னும் தமிழரசன் ஆண்டிருக்கின்றான். இவன், கி.மு. 367-இல் இருந்த சிங்கள அரசன் கணத்திசன் மூத்தசிவன் என்பானின் ஒன்பதாம் மகனாகிய அசேலனைப் போரில் வென்று இந்நாட்டைக் கைப்பற்றினான் என்பர். பின்னர் ஏழாலனிடமிருந்து கர்வந்திசனின் மகன் துட்கைமூனு (இவன் பெயரும் இக்கால் துட்டகைமுனு என்று திரிந்து வழங்குகிறது) இந்நாட்டைக் கைப்பற்றினான். இவ்வாறு கி.மு. 543க்குப் பின் தமிழர்களாலும் சிங்களர்களாலும் மாறிமாறி இந்நாடு ஆளப்பெறினும், அதற்கு முன் இதனை ஆண்டிருந்தவர் பாண்டிய இனத்தைச் சார்ந்த பழந்தமிழரே!

எனவே அங்கு வாழ்கிற தமிழர் இக்கால் சிங்கை, மலேசியா, இலண்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் போல் குடியேறியவர்கள் அல்லர். சாலி அல்லது சாவகம் (சாவா (Java), பொருநையோ (போர்னியோ-Borneo), நக்கவாரம் (நிக்கோபார்-Nicobar), போன்ற நாடுகளில் வாழும் பழந்தமிழினத்தவர்போல் 'பதியெழு வறியாப் பழங்குடி மக்களே' என்பதில் சிறிதும் ஐயமின்று. மேலும், 13-ஆம் நூற்றாண்டிலிருந்து 1619-ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாண முடியரசு தனியுரிமை பெற்ற ஒரு தனி

நாடாகவே இருந்தது. அது யாழ்ப்பாணம் முதல் தெற்கில் புத்தளம் வரைக்கும், கிழக்கில் கிழக்கு மாநிலம் முழுவதும் பரவியிருந்தது. 1619-இல் தான் இம்முடியரசு வீழ்ச்சியுற்றது. அதன் பின்னரும் 1833-ஆம் ஆண்டு 'கோல்புறூக்' ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி, ஆட்சி எளிமைக்காக, வெள்ளையர்களால் தமிழ்மக்களின் விருப்பத்தைத் பெறாமலேயே, வலுக்கட்டாயமாக ஒன்றிணைக்கப்படும் வரை—தனிஅரசு அமைப்புடன் தமிழர்கள், சிங்களவர்களுடன் எவ்வகை அரசியல் இணைப்புமின்றித் தனியாகவே வாழ்ந்திருந்ததை வரலாறு எடுத்துக்காட்டும். பிரிட்டிசுக்காரரால் ஏற்படுத்தப்பெற்ற இந்த வலிந்த ஒன்றிணைப்பைத் தமிழர்கள் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வந்திருக்கின்றனர். 1619க்கும் 1833-க்கும் இடைப்பட்ட போர்த்துக்கீசியர் காலத்திலும், ஒல்லாந்தர் காலத்திலும் கூட, தமிழ்ப் பகுதிகள், சிங்களப் பகுதியினும், வேறான அரசு அதிகாரிகளாலேயே ஆளுமை செய்யப்பெற்று வந்தது. இரண்டு இனத்தவர்களும் ஓரினத்தின்மேல் இன்னோர் இனம் ஆளுமை செலுத்துதல் இன்றித் தனித்தனியான ஆட்சியமைப்புகளின்படியே இருந்து வந்தனர். எனவேதான் உலக ஒன்றிய (ஐ. நா) நிறுவனமே, 'தமிழர்களைத் தன்னாளுமையும், தன்னுரிமையும் கொண்ட மக்களாகவே' மதித்திருக்கின்றது. இவ் வரலாற்று நிலைகளையெல்லாம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு எதிராக, சிறிலங்காக் குடியரசினால் தொடரப் பெற்ற வழக்கில் அவர் சார்பில் Trial-at-bar அற மன்றத்தில் வழக்காடிய திரு. எம். திருச்செல்வம் (Q.C) அவர்கள் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

மேலும் தன்னுரிமை பெற்ற இலங்கைப் பாராளுமன்ற ஆட்சியிலும் கூட, தொடக்கத்தில் மலைப்பகுதித் தமிழர்களின் படிநிகராளியராக எட்டு உறுப்பினர்கள் இருந்திருக்கின்றனர். 1947 முதல் இன்று வரையிலும், தமிழர்களின் இயக்கம் தமிழரசுக்கட்சி என்ற பெயரில் இயங்கி வந்த பொழுதும் சரி, அது தமிழர் கூட்டணியாக மாறிய பொழுதும் சரி, அதன்பின் இப்பொழுதுள்ள 'தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாற்றப்பெற்ற பொழுதும் சரி, தமிழர்களின் ஆளுமை பற்றிய தன்னுரிமைக் கொள்கைகளைத் தமிழர்கள் பலவகையிலும் வலியுறுத்தியே வந்துள்ளனர்.

அதனடிப்படையில் தான், 1972-இல், சிறிமாவோ பண்டார நாயகா ஆட்சியின்பொழுது, பண்டைய வரலாற்று அடிப்படைக் கருத்துகளையே அடியோடு புறக்கணித்துவிட்டு, புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைச் சிங்கள அரசு கொணர்ந்தது. அச் சட்டத்தில், தமிழினத்திற்கும் தமிழ் மொழிக்கும் போதிய உரிமை வழங்கப் பெறாததுமட்டுமன்றித் தமிழர்கள் இரண்டாந்தரக் குடி மக்களாகக் கருதுவதற்கு அச்சட்டம் வாய்ப்பளித்தது. எனவே, இச்சட்டத்தைத் தமிழர்கள் முற்றும் புறக்கணித்தனர். இதனடிப்படையில் தான், தமிழர் தலைவராக விளங்கிய, காலஞ்சென்ற ஈழத் தமிழ்ப்பெரியார் திரு. செல்வநாயகம் அவர்கள் தாம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வந்த பதவியைத் துறந்து, காங்கேசன் துறைத் தொகுதியில் மீண்டும் இடைத் தேர்தலில் நின்று போட்டி

யிட்டு, 16000 பெரும்பான்மை ஒப்போலைகள் பெற்றுத் தமிழர்களைக் கீழ்மைப்படுத்தும் இப்புதிய அரசியலமைப்புச் சட்டத்தைத் தமிழர்கள் ஏற்கவில்லை என்பதை உறுதிப்படுத்தினர். அதுவுமன்றி 1972 மே 22-இல் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் அச்சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்தினர். அதன் விளைவாக அரசு அமைத்த Trial-at-bar அற மன்ற வழக்கின் முடிவில் நடுவர் மூவரும் கூட தமிழர்களுக்குச் சார்பாகவே தீர்ப்பளித்தனர்.

இறுதியாக, இவ்வாண்டு சூலை மாதம் நடந்த தேர்தலில் தமிழர் விடுதலை முன்னணி 17 இடங்களைக் கைப்பற்றி முதன்மையான எதிர்க்கட்சியாக அமர்ந்துள்ளது. 1970-இலிருந்து 77 வரை எட்டு ஆண்டுகள் அரசாண்ட திருவாட்டி. பண்டார நாயகாவின் கட்சியாகிய சிறிலங்கா தன்னுரிமைக்கட்சி கூட தான் நிறுத்திய 145 இடங்களில் 9 இடங்களைத்தான் கைப்பற்ற முடிந்தது. இக்கால் முதலமைச்சராக உள்ள செயவர்த்தனு—பெரும்பாலும் சிங்கள மக்களின் ஒப்போலைகளாலேயே பதவிக்கு வந்தவர். இந்நிலைகள் எவ்வாறிருப்பினும், திருவாட்டி பண்டார நாயகா ஆட்சியிலிருந்த பொழுதும் சரி, இக்கால் உள்ள செயவர்த்தனு பதவிக்கு வந்த பின்னும் சரி, ஆண்ட வழிவழித் தமிழர்கள், இலங்கையில் அடிமைகளாகவே நடத்தப்பட்டு வந்தனர்; வருகின்றனர் என்று அறிகிறோம்.

. சிறிமாவோ ஆட்சியில் 500 தமிழ் இளைஞர்கள் எவ்வகைக் கரணியமுமின்றி ஐந்தாண்டுகள் வரை சிறை வைக்கப் பெற்றிருந்தனர். அவராட்சியில் தமிழர்களின் கல்வி, வேலைவாய்ப்பு முதலிய வாழ்வியல் அடிப்படைக் கூறுகளிலெல்லாம் தமிழர்கள் ஓர வஞ்சனையாகவே நடத்தப் பெற்றனர். அவர், காவல் துறையைத் தம் கைகளிலேயே வைத்திருந்ததால், தமிழ் மக்களைப் பலவகை அரசியல், குமுகாய நிலைகளிலும் அடக்கி, ஒடுக்கிக் கொடுமைப் படுத்தியே வந்திருக்கிறர். சில பொழுதுகளில் ஆடு மாடுகளைப் போல் சுட்டுத் தள்ளியும் இருக்கிறர். யாழ்ப்பாணத்தில் 1974-இல் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஒன்றுமறியாத ஒன்பது தமிழர்கள் சுட்டுத்தள்ளப் பட்டனர். அதற்குக் கரணியமாயிருந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அதன் பொருட்டுப் பதவியினின்று உயர்த்தப் பெற்றுரே தவிர, தண்டிக்கப் பெறவில்லை. இவராட்சியில் 12-5-77-இல் புசல்லாவையில் தோட்டத் தொழிலாளர்களைக் கண்மூடித்தனமாக அடித்து நொறுக்கிவிட்டு, 35 ஆயிரம் உருபா மதிப்புள்ள தமிழர் சொத்துகளைச் சிங்களவர்கள் கொள்ளையடித்துச் சென்றனர். 10 இலக்கம் தேயிலைத் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களின் குடியுரிமையை 1948-இன் குடியுரிமைச் சட்டங்களினடிப்படையில் பறித்துக்கொண்டு, அவர்களுக்கு வேலையும் நிலமும் வழங்க மறுக்கின்ற கொள்கையுடைய சிறிலங்கா தன்னுரிமைக் கட்சிக்குத்தான் இவர் தலைவர். இக்கட்சியினர்தாம் முன்னர், மலைப்பகுதிகளில் உழைப்பையும் அட்டைக் கடியையும் பசிபட்டினியையும் தவிர வேறு எதுவும் அறியாமல் நீண்ட நெடுங்காலமாகவே தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றி வரும் இத் தொழிலாளரைக் 'காணிப்பங்கீடு' என்னும் முறையில் திட்டமிட்டு விரட்டி விட்டுச் சிங்களவர்களை உள்ளே

புகுத்துகின்ற அறக்கொடிய செயல்களைச் செய்தவர்கள். பொதுவாகவே, இலங்கையின் மொத்த வருவாயில் 66 பங்கு வருமானத்தைத்தருவது தேயிலை. இப்பெரும் வருமானத்திற்குக் கரணியமாக நின்று உழைக்கும் ஏழைத் தொழிலாள மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கினர் தமிழர்களே! இம்மலைப்பகுதியில் வாழ்ந்திருந்த தமிழர்களில பெரும்பகுதியினரை இச்சிங்கள வெறியர்கள், 'இந்தியாவுக்கு ஓடிப்போடா!—பறைத் தமிழா—கள்ளத் தோணித்தமிழா—கடலில் நீந்திப்போடா!' என்றுகூறி விரட்டியடித்துள்ளனர். எஞ்சியிருந்த சிறுபகுதியினரும் நடந்த கலவரங்களின்பொழுது விரட்டியடிக்கப் பட்டுள்ளனர். எப்பொழுதும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அடிமை விலங்குகளைப் போலவே நடத்தப் பெறுகின்றனர். அவர்களில் பலர் வேலை நேரம் போக எஞ்சிய நேரங்களில் இரந்துண்டே பிழைக்கின்றனர். தங்கள் கைக்குழந்தைகளை நடைபாதைகளில் கிடத்தி விட்டு, அவர்கள் குடும்பம் நடத்துகின்ற காட்சிகள் மிகக் கொடுமையானவை என்று 'வீரகேசரி' நாளிதழில் முன்பே ஒரு செய்தி வந்திருந்தது.

இலங்கை மக்கள் தொகை மொத்தம் ஒரு கோடியே இருபது இலக்கம். அதில் தமிழர்களின் தொகை 35 இலக்கத்திற்கும் மேல் என்று கூறப்பெறுகிறது. இதில் கிறித்தவர்களும் தமிழ் பேசும் இசுலாமியர்களும் அடங்குவர். அவ்வாறிருந்தும் அரசு, தனியார் நிறுவனங்களில் சிங்களவர்க்கே வேலைகள் தரப்பெறுகின்றன. இலங்கைப் படைத்துறையில் தமிழினத்தவர்கள் ஒரு விழுக்காட்டினரே உள்ளனர் என்றும் கூறப்பெறுகிறது. அங்குள்ள ஆட்சி மொழி சிங்களம மட்டுமே! அறமன்றங்களில் தமிழ் இல்லை! அனைத்துத் துறைகளிலும் சிங்கள மொழிக்கே தலைமை. ஏறத்தாழ இந்தியாவில் எப்படி இனத்தால் ஆரியரும், அல்லது வடவரும், மொழியால் சமசுக்கிருதமும் அல்லது இந்தியும் தமிழின மக்களை அடிமைப் படுத்திக் கொண்டிருக்கும் நிலையுள்ளதோ, அப்படியே அங்குள்ள தமிழர்களை இனத்தால் சிங்களவரும், மொழியால் சிங்களமும் அடிமைப் படுத்திக்கொண்டிருக்கும் நிலை உள்ளது. ஒருவகையில் சிங்களவரும் ஆரிய இனத்தவர் தாம்! அவர் மொழியில் சமற்கிருதமே பெரும்பகுதி கலந்துள்ளது.

மேலும் இந்தியாவில் உள்ள அரசியல் ஆளுமை நிலைகளுக்கும், இலங்கையில் உள்ள ஆளுமை நிலைகளுக்கும் தமிழர்களைப் பொறுத்த வரையில் பலவகையிலும் ஒற்றுமை இருப்பதைக் கண்டு நாம் வியக்காமல் இருக்க முடியவில்லை. இந்தியாவில் எப்படி இந்திராவின் ஆட்சிக் காலத்தில் இந்திய இனம், குறிப்பாகத் தமிழினம் மிகவும் கொடுமைப் படுத்தப் பெற்றதுடன் தமிழர்களுக்குக் காப்பாய் இங்கிருந்த தமிழாட்சியும் கவிழ்க்கப் பெற்றுத் துன்புற்றதோ, அதே போல் இலங்கையில் சிறிமாவோ ஆட்சியிலும், தமிழர்களுக்குக் கொடுமை தரும் வகையில் அரசியல் நடவடிக்கைகள் இருந்தன, இந்திராகாந்திக்குப்பின் இந்தியத் தலைமையை எப்படி மொரார்சி கைப்பற்றினரோ அப்படியே சிறிமாவோவுக்குப்பின் செயவர்த்தனவும் இலங்கை ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார். இந்திராகாந்தி தம் அரசியல் பதவியையும் பெருமையையும் இழக்க அவர் மகனும்

அனைத்திந்திய இளைஞர் பேராயக்கட்சி அதிகாரத் தலைவருமாகிய சஞ்சய்காந்தி எப்படிக் கரணியமாக இருந்தாரோ, அப்படியே, இலங்கையில் பண்டாரநாயகா தம் பதவியையும் பெருமையையும் இழக்க, அவர் மகனும், சிறிலங்கா தன்னுரிமைக்கட்சி இளைஞர் பிரிவின் தலைவருமாகிய அனுரா கரணியமாக இருந்தார். இனி, இந்திய அரசியலைப் பொறுத்தவரை இந்திராவும் மொரார்சியும் நேர் எதிரெதிராக இருந்தாலும், தமிழினத்தைப் பொறுத்த அளவிலும் இந்தி மொழியைப் பொறுத்த அளவிலும் இருவரும் எப்படி ஒரே கருத்தில் செயல்படுகின்றனரோ, அப்படியே இலங்கை அரசியலைப் பொறுத்தவரை சிறிமாவோவும் செயவர்த்தனவும் நேர்எதிரெதிராக இருந்தாலும், அங்குள்ள தமிழினத்தைப் பொறுத்த அளவிலும், சிங்கள மொழியைப் பொறுத்த அளவிலும் ஒரே கருத்தினராக இருக்கின்றனர். இத்தகு வியப்பான ஒற்றுமையைப்பற்றி, மொரார்சி அவர்களே, இலங்கையில் செயவர்த்தன தலைமையமைச்சராகப் பதவியேற்றவுடன், அவருக்கனுப்பிய வாழ்த்துச் செய்தியில், "நான் இந்தியாவின் தலைமையமைச்சராகப் பதவியேற்ற பொழுது, நம் இருவரின் அணுகு முறைகளிலும் பல ஒற்றுமைகள் இருப்பதாக நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். இப்பொழுது நீங்கள் வெற்றி பெற்றுள்ள வகை மற்றுமொரு சுவையான ஒற்றுமையைக் காட்டுகிறது" என்று குறிப்பிட்டதை இங்குள்ள ஒரு சிலரே விளங்கிக் கொண்டிருக்க முடியும். இதனை இங்கு எதற்குக் குறிப்பிடுகிறோம் என்றால், தமிழர்கள் சிறிமாவோ ஆட்சியில் மட்டும் துன்புறுத்தப்படவில்லை; செயவர்த்தன ஆட்சியிலும் அதைவிடத் துன்புறுத்தப்படுகின்றனர் என்பதற்கு அடிப்படையாக எந்த வகையான உணர்வுகள் உள்ளன என்பதைக் குறிப்பாகவேனும் சுட்டிக் காட்டுவதற்குத்தான். எனவே தான் செய்வர்த்தனவை இங்குள்ள தமிழ்ப்பகைவர்கள் வரவேற்கின்றனர்.

ஆனால், இலங்கைத் தலைமையமைச்சர் திரு. செயவர்த்தன அவர்கள், சிறிமாவோ பண்டாரநாயகாவைவிட சிங்கள இனவெறியில் பலபடிகள் மேலானவர். சிங்கள மொழியையே முதன்மையாகக் கருதுபவர். மறைந்த தமிழர்தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களுக்கும், காலஞ்சென்ற பண்டாரநாயகா அவர்களுக்கும் 1957-இல் தமிழ்மொழிக்கு நன்மை ஏற்படும் வகையிலும், தமிழ் நிலத்துக்குத் தன்னாட்சி ஏற்பட வழி செய்யும் வகையிலும், ஓர் ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது, அவ்வொப்பந்தத்தை எதிர்த்து, இச் செயவர்த்தன அவர்கள் தம் ஒன்றிய தேசியக்கட்சித் தொண்டர்களுடன் கொழும்பிலிருந்து கண்டிக்கு (ஏறத்தாழ 100 கற்கள்) கால்நடைச்செலவு (பாதயாத்திரை) மேற்கொண்டு, அவ்வொப்பந்தத்தையே கிழித்தெறியக் கரணியமாக இருந்தவர். அதன் பின்னரும் தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும் எளிமையாகக் கருதும் சிறுசிறு சலுகைகள் தரப்பெற்ற பொழுதெல்லாம்கூட, இவர், அவற்றைக் கூட்டங்கள் போட்டும் கால்நடைச் செலவு மேற்கொண்டும், ஊர்வலங்கள் நடத்தியும் எதிர்த்தவர். பிறகு, 1966-ஆம் ஆண்டு டட்லி—செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ்மொழிக்கு உரிமை கொடுப்பதை எதிர்த்தும், சிங்கள இன வெறியைத் தூண்டிவிட்டு ஊர்வலம் நடத்தியும், புத்தத்துறவி ஒருவரைப் பலி கொடுத்தும், பின்னர் 1970-ஆம் ஆண்டில் சிங்கள வெறியரான அந்தப் புத்தத் துறவிக்கு நினைவு மண்டபம் கட்டியும் நிறைவு மலர்

வெளியிட்டும், தமிழ்க் குமுகாயத்தை அவமானப் படுத்தியவர்தாம் இந்தச் செயவர்த்தனுவும் அவரின் ஒன்றிய தேசியக் கட்சியும். 1956-ஆம் ஆண்டுச் சிங்களம் மட்டும் என்னும் சட்டத்தைக் கொணர்ந்தவர் காலஞ்சென்ற பண்டாரநாயகா என்ருல், 1944-ஆம் ஆண்டே, "சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக வேண்டும்; எல்லாப் பள்ளிகளிலும் சிங்களமே பாடமாக வேண்டும்; எல்லாத் தேர்வுகளிலும் சிங்களமே கட்டாயப் பாடமாக வேண்டும்" என்று தீர்மானம் கொண்டு வந்தவர் இந்தச் செயவர்த்தனுவே.

இப்படிப்பட்ட முழுச்சிங்கள வெறியரான செய்வர்த்தனு ஆட்சிக்கு வந்த பின்னர்தான் சிங்கள இனத்தவர் தமிழினத்தவரைப் பல வகையிலும் பழிவாங்க முற்பட்டுள்ளனர். இந்த முயற்சியின் முனைப்புதாம் கடந்த ஆ.:கச்டில் நடந்த இலங்கைக் கலவரங்கள்! இந்தக் கலவரத்தின் எழுச்சியும் போக்கும் ஏட்டில் விளக்குதற்கியலாக் கொடுமைகள் வாய்ந்தன. இவர் ஆட்சிப் பொறுப்பேற்ற அன்றே (சூலை 23) சிறிமாவோ தொகுதியாகிய கொழும்பு–அட்டனகெல்லா என்னுமிடத்தில், இவர் கட்சியினர்க்கும் சிறிமாவோ கட்சியினர்க்கும்-பெரிய மோதல் ஏற்பட்டு 20 பேருக்குமேல் கொலையுண்டதாகச் செய்தி வந்தது. அந்த அளவுக்கு இவரைப் பின்பற்றும் சிங்கள இனத்தவர் ஆளுமை வெறி பிடித்தவர்கள். அதன்பின் நடந்த ஆ.:கச்டுக் கலவரத்தை அரசியல் கலவரம் என்றே செய்தித்தாள்கள் குறிப்பிட்டன. ஆனுல் இதன் முழுத் தன்மைகளையும் உணர்ந்தோர் இதனைச் சிங்களவர்கள் தமிழர்கள் மேல் நடத்திய இன அழிப்புப் போர் என்றே கருதுவர்.

கடந்த 12—8—77-இல் யாழ்ப்பாணத்தில் ஒரு களியாட்ட விழாவில்தான் இக்கலவரம் தொடங்கியது. இதுபற்றி தமிழர் விடுதலை முன்னணித் தலைவரும் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமாகிய திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் 18–8–77 அன்று தேசியப் பேரவையில் ஓர் அறிக்கையில் விளக்கியுள்ளார். யாழ்ப்பாணம் மருத்துவமனையில் புற்றுநோய்ப் பண்டுவப்பகுதி ஒன்றை நிறுவப் பொருள் சேர்க்கும் நோக்குடன், யாழ்ப்பாணம் சுழற்கழகம் (Rotary club) சம்பத்திரிசியார் கல்லூரியில் ஒரு கலை நிகழ்ச்சி நடத்தியது. உடையணியாத காவலர் சிலர் இலவயமாக அதற்குப் போக முயற்சி செய்து, வாயிலில் உள்ள தமிழரால் தடுக்கப் பட்டுள்ளனர். அதனடிப்படையில் காவலர்களுக்கும் பொது மக்களுக்கும் சண்டை தோன்றியதன் விளைவாக, 13–8–77-இலிருந்து சிங்களக் காவலர்கள் தமிழ்ப் பொதுமக்களைப் பார்க்கின்ற இடங்களிலெல்லாம் தாக்கத் தொடங்கியுள்ளனர். அன்று தொடங்கி, அம்மாத கடைசி வரை தமிழர்கள் தொடர்ந்து பலவகையிலும் கொடுமைப்படுத்தப் பட்டுள்ளனர். சிங்களக் காவலர்களுக்குத் துணையாகச் சிங்களப் பொதுமக்களும் சிங்களப் படைகளும் சேர்ந்து தமிழர்கள்மேல் மும்முனைத்தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்நிலைகள் பற்றியெல்லாம் செய்தித் தாள்களில் வந்தவையனைத்தும் குறைவும் திரிபும் புனைவும் கொண்ட செய்திகளே! இவற்றை இந்தியாவின் நெருக்கடி நிலைக்காலத்தில் வெளியான செய்திகளுக்கு ஒப்பிடலாம்! உண்மையான செய்திகள் இன்னும்கூட பலருக்கும் தெரியா!

நிகழ்ச்சிக்கு இரண்டு நாட்களின் பின், யாழ்ப்பாணக் கடைத் தெருக்களில் கடைகள் மண்ணெய் ஊற்றிக் கொளுத்தப்பட்டன. தமிழர் கடைகளின் பெயர்ப்பலகைகள் உடைக்கப்பட்டன. கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன; மாணவர்களும் அவர்களுடைய மிதி வண்டிகளும் அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டன; சந்தைக் கட்டிடம் எரிந்து, கடைகள் சாமபலாயின. கொழும்பிலிருந்து காங்கேசன் துறை நோக்கி வந்து கொண்டிருந்த தொடர் வண்டிகளை அநுராத புரம், பொலநுறுவை, குநாகல், மதவாச்சி போன்ற நிலையங்களில் நிறுத்தி, வலுக்கட்டாயமாக வண்டியினுள் சிங்களவர்கள் நுழைந்து, அவற்றிலிருந்த தமிழ்ப்பெண்களை மான அழிவு செய்தனர்; கற்பழித் தனர்; மார்புகளை அறுத்தெறிந்துள்ளனர். அவற்றிற்குத் தப்பி ஓடியவர்கள் துரத்திச் செல்லப்பட்டு வெட்டி வீழ்த்தப பட்டுள்ளனர். தமிழ்–சிங்கள எல்லைப் பகுதியான வவுனியா போன்ற இடங்களில் பலர் பிணங்கள் மரங்களில் தூக்கித் தொங்க விடப்பட்டன. முதிய வர்களை ஓடஓட விரட்ட, அவர்கள் ஓடமுடியாமல் விழுந்து மடிந் துள்ளனர். பலரை வாள்களால் வெட்டியும் பச்சிளங் குழந்தைகளைக் காலில் போட்டும் மிதித்துள்ளனர்.

இலங்கையில் தமிழர்கள் பெரும்பாலும் வடக்கு, கிழக்குப் பகுதி களில் தாம் மிகுதியாக வாழ்கின்றார்கள். எனவே தெற்கு, மேற்கில் உள்ள சிங்களப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் கலவரந் தொடங்கிய வுடன், தமிழ்ப்பகுதிகளை நோக்கி விரட்டியடிக்கப் பட்டுள்ளனர். 50, 100 ஆண்டுக் காலமாகச் சிங்களப் பகுதிகளிலேயே தங்கி அரசுப் பணிபுரிந்தும், கடை கண்ணிகள் வைதது வாணிகங்கள் செய்தும், தேயிலைத் தோட்டங்களிலும் வேறு பல சிறு தொழில் களிலும் ஈடுபட்டுத் தொழில்கள் செய்தும் வருகின்ற மூன்று இலக்கம் குடுமபங்கள், இக்கலவரங்களின் பொழுது குற்றுயிரும கொலையுயிரு மாய் அல்லோல கல்லோலப் பட்டிருக்கின்றன.

அங்கிருந்த நூற்றுக்கணக்கான தமிழர் வீடுகள் கொள்ளையிடப் பெற்றன; தமிழர் கடைகள் சூறையாடப்பெற்றன; பல கடைகள் தீக்கிரையாகின. அநுராதபுரத்தில் தொடர் வண்டி நிலைய அதிகாரிக ளாகப் பணியாற்றிப இரண்டு தமிழர்கள் கொடுமையாக வெட்டப் பட்டுள்ளனர் இரவில் வந்த தொடர் வண்டிகளில் சூறைடாடி இருக் கின்றனர். பெட்டிகளில் ஏறித் தமிழர்கள் இருக்கிறார்களா என்று கேட்டு, அவர்கள் பெட்டி படுக்கைகளை எடுத்து வீசி உள்ளனர். பெண்களையெல்லாம் ஆடைகளைக் களையச் சொல்லியுள்ளனர். களைய மறுத்தவர் ஆடைகளை இழுத்துப் பறித்துக் கிழித்தெரிந்து அம்மண மாக்கியுள்ளனர். கொடுமைக்குத் தப்பியோடிய ஓர் இளம் பெண்ணை யும் அவள் கணவனையும் தேடிப்பிடித்து அவர்களின் உடைகளைக் களைந்து அவமானப் படுத்திக் கொடுமை செய்துள்ளனர்; கொழும்புத் துறைமுகப் பகுதியில் ஒரு நிறை சூலியின் வயிற்றைக் கீறிப்பிளந்து நடுத்தெருவில் போட்டு, வேடிக்கை பார்த்து ஆரவாரக் கூச்சலிட்

டுள்ளனர். வவளிக்குளம் தமிழ்ப் பகுதியில் இளைஞர்களையும் மாணவர்களையும் படைத்துறைச் சிங்களவர்கள் ஓடஓட விரட்டியுள்ளனர். திருகோண மலைப்பகுதியில் மட்டும் ஏறத்தாழ 200 பேருக்குமேல் கொல்லப்பட்டுள்ளனர்.

மலைப்பகுதிகளான கண்டி, நுவரெலியா, அற்றன், பதுளை, மசுக்கெலியா முதலிய பகுதிகளில் வாழும் தமிழர்கள் பெரும்பாலும் குடியுரிமை, ஒப்போலையுரிமை, கல்வியுரிமையற்ற தோட்டத் தொழிலாளர்கள். இவர்களுக்குச் சரியான வீடுகளும் இல்லை. ஆங்காங்கு வரிசை வரிசையாகக் கட்டப்பெற்ற மிகத்தாழ்ந்த குடியிருப்புகளிலேயே அவர்கள் வாழ்கின்றனர். பெரும்பாலும் சட்டி பானைகள் தவிர இவர்களுக்கு வேறு உடைமைகள் இல்லை. கலவரத்தின்பொழுது இவர்கள் குடியிருப்புகள் கொளுத்தப்பட்டன. வங்காளத் தேசக் கொடுமைகள் யாவும் இங்கு நடந்தன என்று தெரிய வருகிறது. மலைகள் நிரம்பிய இப்பகுதிகளிலிருந்து, ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்டோர், வீடுவாயில்களை இழந்து, உடுத்த உடையுடனும், பெண்கள் உள்ளாடைகளுடனும், பலர் உறுப்புக்குறைவுடனும், கன்னியர்கள் கற்பை இழந்தவர்களாகவும் நூற்றுக்கணக்கான கற்கள் நடந்து, உயிர் தப்பி யாழ்ப்பாணம் பகுதிகளுக்குத் தொடர்ந்து வந்திருக்கின்றனர்!

தோட்டத் தொழிலாளர் பலர் தம் குடியிருப்புகளுக்குள்ளேயே பூட்டப்பட்டுத் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளனர். சம்பளம் வாங்கிக் கொண்டு வீட்டிற்குப் போன தமிழர்கள் கொலை செய்யப்பட்டு அவர்கள் பணமும் கொள்ளையிடப் பட்டுள்ளன. செட்டிகுளம் பகுதியில் தப்பியோடிய பலரைத் தண்ணீரிலேயே குதிக்கச் செய்து அவர்கள் தலைகளைப் பார்த்துச் சுட்டுக் கொன்றிருக்கின்றனர். சிலரைக் கிணற்றுக்குள் தூக்கிப் போட்டு அருகிலுள்ள உரல்கள், உலக்கைகள், கற்கள் இவற்றைத் தூக்கிப் போட்டுத் துன்புறுத்தியிருக்கின்றனர். வெறிபிடித்த சிலர் இளைஞர் சிலரின் ஆண்குறிகளை அறுத்தெறிந்து கொன்றுள்ளனர். ஒருவருடைய முதுகுத் தோலைப் பீங்கான் ஓடுகளால் கிழித்து, அரத்தத்தை உள்ளங்கையில் வைத்துப் பார்த்து, 'முதுகில் ஓடுவது தமிழ் அரத்தந்தானா?' என்று கேட்டு எக்களிப்போடு கெக்கலி கொட்டி நகைத்திருக்கின்றனர், வெறியர் சிலர். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் கந்தளாய், மாத்தளை, தம்புள்ளை, அநுராதபுரம், ஓரலப்பொத்தான, பதவியா, மதவாச்சி, மாகோ, பவுனியா, கல்கமுவை, பாணந்துறை, நாவலப்பிட்டி, குருணகலை, புளியங்குளம், கெக்கிராவை, இரத்தினகிரி, நொச்சியாகமை முதலிய இடங்களில் மிகுதியும் நடைபெற்றனவாகத் தெரியவருகின்றன.

இந்தக் கலவரங்களில் ஈடுபடுபவர்களெல்லாரும் பெரும்பாலும் 'சிங்கள தருண பெரமுன' என்னும் சிங்கள இளைஞர் முன்னணியினரும், சிறிலங்கா தன்னுரிமைக் கட்சியைச் சேர்ந்தவர்

களும், அவர்களுக்கு ஆதரவான காவல் துறையை—படைத்துறையைச் சேர்ந்தவர்களுந்தாம் என்று ஐயுற வேண்டியுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்களும் பேரளவில் இருக்கின்றனர் என்றும் இன்னொரு வகைச் செய்தியுரைக்கின்றது. 'சிங்கள தருண பெரமுன' என்னும் இளைஞர் கட்சியின் முழக்கமே 'தமிழர்களுக்குத் தனிநாடு கொடுக்காதே' 'தமிழர், சிங்களர் என்று தரப்படுத்துதலை அகற்றாதே' என்பவைதாமாம்! மேலும் இலங்கைப் படைத் துறையில் 'அரிமா படைப்பிரிவு' (Singa Regiment) என்னும் படைப்பிரிவு ஒன்று உள்ளதாம்! இப்பிரிவில் உள்ள அனைவரும் சிங்களவர்கள் தாமாம். வேறு இனத்தவரை இந்தப் பிரிவில் சேர்ப்பதில்லையாம். 1958–இல் நடந்த சிங்கள—தமிழர் இனக்கலவரத்தில் ஈடுபட்ட சிங்கள இளைஞர்களே அப்படையில் சேர்த்துக் கொள்ளப் பெற்றுள்ளனராம். இதற்குமுன் நடைபெற்ற மூன்று கலவரங்களிலும் (1956, 1958, 1961) இப்படைப் பிரிவினர்தாம் தமிழர்களைக் கொலையும், கற்பழிப்பும், கொள்ளையும் செய்தவர்களென்று கூறப்பெறுகிறது. உண்மைகள் எங்கிருக்கின்றன என்பதைத் தமிழ்த் தலைவர்களும், அரசும் இனிமேல் தான் கண்காணித்துப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு கொல்லப்பட்டோர் தொகை 1500க்கு மேலிருக்கும் என்றும், வீடு, வாயில்கள், சொத்துகளை இழந்து ஏதிலியானவர்கள் தொகை 50000க்கும் மேலிருக்கும் என்றும், தமிழர்களின் மொத்தச் சொத்திழப்பு ஏறக்குறைய 100 கோடி உருபாய்க்கும் மிகுதியாகவிருக்கும் என்றும் சொல்லப் பெறுகின்றன. மற்றும் காணமற்போன தமிழர்களும் நூற்றுக்கணக்கானோர் உள்ளனர். இவர்கள் என்ன ஆனார்கள் என்பதே தெரியவில்லையாம். அத்துடன் பற்பல நிகழ்ச்சிகளின் கொடுமைகளாலும், தம் பெண்டு பிள்ளைகளைப் பறி கொடுத்ததாலும் நிகழ்ச்சிகளை நேரில் கண்டதாலும் நூற்றுக்கணக்கான பெண்கள் தங்கள் நினைவிழந்து பித்துப்பிடித்த நிலைகளுக்கு ஆளாகிப் போயினராம்.

இக்கலவரங்களின் பொழுது நடந்த கொடுமையின் மேனிலை என்னவென்றால் சிங்கள வெறியர்களுக்குத் துணையாகச் சிங்களக் காவலர்களும் படைத்துறையினரும் நடந்து கொண்டதுதான்! வேட்டெஃகம் வைத்துக் கொள்ள உரிமம் பெற்ற தமிழர்களிடமிருந்து அவை காவலர்களால் பிடுங்கப்பட்டு அவை சிங்களர்களின் கைகளில் தரப்பட்டுள்ளன.

படைத்துறையினர் சிலர் மட்டக்களப்புப் பகுதியில் தெருவில் போகும், தமிழ் மக்களை நிறுத்தி முழங்காலில் நிற்கச் செய்து, 'புத்தம் சரணம் கச்சாமி' என்று சொல்லும் படியும் 'சிங்களம் படிப்போம்' என்று கூறும்படியும் வற்புறுத்திச் சொல்ல வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் தமிழர் கடைகளில் உள்ள பொருள்களை

யெல்லாம் தம் விருப்பம்போல் எடுத்துப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றும் அறிகிறோம். இனி இன்னொன்றும் குறிப்பிடத்தக்கது. இக்கலவரங்களின் பொழுதெல்லாம் தமிழ்க் காவலர்கள் வெளியே அனுப்பப் பெறவில்லையாம். அவர்கள் காவல் நிலையங்களிலேயே அறைகளில் பூட்டி வைக்கப்பட்டுள்ளனர். காரணியம், தமிழர்களுக்குச் சார்பாக இவர்கள் இயங்கக்கூடும் என்ற அச்சமாக இருக்கலாம். இனி இன்னொரு செய்தி மிகவும் வியப்பும் அதிர்ச்சியும் தரத்தக்கதா யுள்ளது. கொழும்புவில், கலவர வேளையின் பொழுது கொள்ளை யடிக்கப்பட்ட பொருள்கள், இப்பொழுதைய ஆட்சியினராகிய ஒன்றிய தேசியக் கட்சியின் கிளைச்செயலகம் ஒன்றுக்குக் கொண்டு சேர்க்கப் பட்டுப் பின்னர் சிங்களக் காவலர்கள், படைத்துறையினர், சிங்களப் பொதுமக்கள் இவர்களால் பங்கு போட்டுக் கொள்ளப் பெற்றதாக அறிகிறோம். இச்செய்தி உண்மையாக இருக்குமானால், இப்போராட் டங்களின் மூலமும் வேறும் எவையாக இருக்கும் என்று எண்ணி யறிந்து கவலுற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இக்கலவரங்களின் பொழுது தமிழர்களின் கோயில்களும் பல விடங்களில் தரைமட்டமாக்கப் பட்டுள்ளன என்று தெரிகிறது. திருகோணமலையிலிருந்து $1\frac{1}{2}$ கல் தொலைவிலுள்ள 'மக்கோ' என்னும் சிற்றூரிலுள்ள கத்தோலிக்கரின் அன்னைவேளாங்கண்ணி கோயிலும், பாலையூற்றிலுள்ள பிள்ளையார் சிலையும் அடித்து நொறுக்கப் பட்டுள் ளனவாம்! திருகோணமலையில் உள்ள கோணேசர் கோட்டைக்கு முன் னுள்ள கோவிலிலுள்ள பிள்ளையார் சிலை கடலுக்குள் வீசப்பட்டதாம்.

இவ்விடத்தில் தேசியப் பாவலர் பாரதியார், தமிழினம் வேற்று நாடுகளில் எவ்வாறெல்லாம் துன்புறுகின்றன என்பது பற்றிப் பாடிய இருபாடல்கள் நினைவுக்கு வருகின்றன.

ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவி, இவ் வெளிய
தமிழச் சாதி, தடியுதை உண்டும்
காலுதை உண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறுது
செத்திடும் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்
நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்
இஃதெலாம் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்!

என்பது ஒன்று. மற்றொன்று வெளிநாடுகளில் அங்குள்ள இன வெறியர்களால் பெண்கள் துன்புறும் செய்தி பற்றியது. அஃது இது

பெண்ணென்று சொல்லிடிலோ—ஒரு
பேயும் இரங்கும் என்பார் தெய்வமே! நின(து)
எண்ணம் இரங்காதோ!—அந்த
ஏழைகள் அங்குச் சொரியுங்கண் ணீர்,வெறும்
மண்ணிற் கலந்திடுமோ?—தெற்கு
மாகட லுக்கு நடுவினிலே, அங்கோர்
கண்ணற்ற தீவினிலே—தனிக்
காட்டினில் பெண்கள் புழுங்குகின்றார்!—அந்தக்
கரும்புத் தோட்டத்திலே!

நெஞ்சம் குமுறுகிறார்—கற்பு
நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே, அந்தப்
பஞ்சை மகளிரெல்லாம்—துன்பப்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமு மில்லாதே—அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ?

நெஞ்சு நடுக்குறும், இக்கொடுமை, கொலை நிகழ்ச்சிகளுக் கெல்லாம் உறுதி கூறும் வகையில், யாழ்ப்பாணத்தில் 16-8-77இல் காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில், தீர்ப்புரை வழங்கிய நடுவர் திரு. கே. வி. நவரத்தினம் அவர்கள், தம் உரையில் கீழ் வருமாறு குறிப்பிட்டுள்ள பகுதி எல்லாராலும் கண்டு மெய்யுணரத் தக்கது. “வளர்ந்துவரும் ஒழுக்கக் கேட்டின் மூலம் நயன்மை, அறம், பெருமை ஆகியன நிலைஇறங்கி வரு வதை உணர்கிறேன். நயன்மையை ஆராய்கின்ற மாந்தக் குணம் எத்துணைக் கொடுமையான காடுகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. இன்று விரைவு கரணியமாக உண்மைகள் பலியிடப் பெறுகின்றன. குற்றம் புரிவது இன்று ஒழுக்கமாகி விட்டது. குற்றங் களைத் தடுக்க வேண்டிய அமைப்பு இன்று ஏளனத்துக்கு இலக்காகிக் கொண்டிருக்கின்றது”—என்பது அவர் தீர்ப்புரை யின் ஒரு பகுதியாகும்.

இனி, நடந்துள்ள கொடுமைகளையறிந்த பாரிசிலுள்ள ‘அனைத் துலக மாந்த உரிமை நிறுவனம், அவையனைத்தையும் சுட்டிக்காட்டிக் கண்டித்தும், தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கோரியும் இலங்கைத் தலையமையமைச்சருக்கு விரிவான மடல் விடுத்திருக்கின்ற தும், பிரிட்டிசு ஒலி பரப்பில் அறிஞர், வயவர். ஐவர். சென்னிங்சு என்பார் ‘ இலங்கையில் சிங்கள மக்கள் தமிழ் மக்களை இவ் வளவில் கொடுமைப் படுத்துவார்கள் என்று தெரிந்திருந் தால், ஒற்றையாட்சித் திட்டத்தின்கீழ் இலங்கைக்குத் தன்னுரிமை கொடுத்திருக்க நாங்கள் இசைந்திருக்க மாட்டோம்” என்று கூறியிருப்பதும், தமிழர்களுக்குச் சிங்களவர்க

ளால் எத்துணையளவு கொடுமைகள் நேர்ந்திருக்கின்றன என்பதை ஒருவாறு காட்டும்!

இனி, சிங்கள இனத்தைச் சேர்ந்த புத்த துறவியர் சிலர் இவ்வின அழிப்புக் கலவரங்களுக்குத் தூண்டுகோலாயிருப்பதும் தெரியவருகிறது. வண. மெற்றிய கொட குணரத்தின தேரோ என்னும் புத்த துறவியர் ஒருவர் "இந்த நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று கோருபவர்களை நூறு ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறைக்குள் தள்ள வேண்டும்" என்று கூறியிருக்கிறார். இன்னொரு புத்த துறவியர் ஒருவர் "துட்டகைமுனு, பராக்கிரமவாகு, வாலகம்பா ஆகியர்காலத்திலிருந்தே தமிழர்கள் ஒரு சிக்கலாக இருந்து வந்திருக்கின்றனர்" என்று அண்மையில் பேசியுள்ளார். இன்னும், சிங்கள அமைச்சர் ஒருவர் கலவரங்கள் நடந்து கொண்டுள்ள பொழுதே, பாராளுமன்றத்தில் "முன்பு தமிழ் மன்னன் எல்லாளனை! எதிர்த்து வெற்றிகொண்ட சிங்கள மன்னன் 'துட்டகைமுனு' இன்றைய சிங்கள இளைஞர்கள் அரத்தத்தில் வாழ்கிறான். தமிழர்கள் சிங்களவர்களை எதிர்த்து மோதினால் இச்சிங்கள இளைஞர்கள் எப்படிப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்? எல்லாளனைக் கைமுனு அழித்தது போல் தமிழர்களை இவர்களும் அழித்து விடுவார்கள் "என்று மார் தட்டிப் பேசியுள்ளார். மேலும், யாழ்ப்பாணத்தில் நிகழ்ச்சியின் இரண்டாம் நாளன்று, சிங்களக் காவலர்கள் நடந்துகொண்ட கொடுமைகள் பற்றி மேலதிகாரி ஒருவருடன் பேசச்சென்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவருமான திரு. அமிர்த லிங்கத்தையே காவல் நிலையத்துள்ளே வைத்துச் சிங்களக் காவலர்கள் சிலர் அடித்துள்ளனர். மேலதிகாரி தடுத்தும் கேளாமல் தாக்கியுள்ளனர். அதற்கு இன்றுவரை அரசுச் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிகிறது. வவுனியாப் பொதுக் குடியிருப்புப் பகுதியில் கடந்த 20 ஆண்டுகளாகக் குடியிருந்த தமிழ்ச் சட்ட அறிஞர் ஒருவரை 13—9—77 அன்று மூடுகிவந்த படைத்துறையினர் சிலர் அடித்து அறையிலிருந்து தூக்கி வெளியே எறிந்திருக்கின்றனர்.

இவற்றையெல்லாம் அறிகின்ற பொழுது இலங்கையில் நடந்ததும் தொடர்ந்து நடந்து வருவதும் கட்சிக்கலவரமாகவோ, அரசியல் கலவரமாகவோ, அல்லது இலங்கையிலுள்ள இந்தியஉயர் வினையமர்த்தாளர், (High Commissioner) திரு. குர்பகன்சிங் அங்குள்ள ஏதிலியர் அடைவிடங்களைப் பார்வையிட்டப்பின், இந்தியத் தலைமையமைச்சர் தேசாயிடம் நேரில் கூறியதுபோல், வேலையில்லாதோரும் சில குழுகாயக் கொடியவர்களும் செய்த செயல்களாகவோ தெரியவில்லை. அரசியல் அதிகாரத்துணையுடன் திட்டமிட்டுத் தமிழர்களின் எழுச்சியை முறியடிப்பதும், முடிந்தால் அவ்வினத்தையே அடக்கி ஒடுக்கி அழித்தொழிப்பதுமான கொடிய ஒரு தொடர்ந்த முயற்சியாகவே தெரிகிறது.

இலங்கைத் தமிழர்களின் தனி நாட்டுக் கோரிக்கை தவறன்று; ஏதோ ஒரு கரிசுமன்று! அங்கு அவர்கள் நிலையில் உள்ள ஓரினத் திற்கு உடனடித் தேவையானதே அது! அக்கோரிக்கை புதியதும் அன்று. காலஞ்சென்ற பண்டார நாயகா 'சிங்களம் மட்டுமே' என்ற கொள்கையை அறிவித்த பொழுதே தமிழர் தலைவர் திரு. சி. சுந்தர லிங்கம் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்தார். அதன்பின் 1968-இலிருந்து தலைவர்கள் வ. நவரத்தினமும் 1974-ஆம் ஆண்டு முதல் எசு. எசு. வி. செல்வநாயகமும், சி. சி. பொன்னம்பலமும் தனி நாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றனர். அங்குள்ள தமிழர்கள் தக்க பாதுகாப்புடனும் உரிமை களுடனும் பிறரைப்போல் அச்சமற்ற முழுநலம் சார்ந்த வாழ்க்கை நடத்த முடியாத நிலையிலும்-அரசுத்துணையும் ஆதரவுமற்ற நிலையி லுந்தான் தங்கள் இனத்தையும், மொழியையும், நிலத்தையும் காத்துக் கொள்ளும்படியான ஓர் அரசியலமைப்பைக் கோருவதாகத் தெரி கிறது. இதைத் தலைவர். திரு. அமிர்தலிங்கம் அவர்கள் 5—9—77 அன்று 'அமெரிக்கக் கிழமைச் செய்தி' (America news week) இதழுக்கு அளித்த நேருரையில், "நாங்கள் சிக்கல் களுக்கு அமைதியான முறையில் தீர்வு காணவே விரும்பு கிறோம். ஆனால் அப்படியொரு தீர்வு ஏற்படாவிட்டால் அதற்காக எப்பொழுதும் அடிமைகளாக வாழ விரும்ப மாட்டோம்" என்று உறுதிப்படுத்திக் கூறியிருப்பதை அனைவரும் கருதிப் பார்க்க வேண்டும்.

இனி, 'எந்த ஒரு தேசிய இனம் தனித்து வாழ்ந்து, தனியாக இயங்க வேண்டுமென்று உறுதியுடன் முடிவு செய்தாலும் அந்தத் தேசிய இனத்துக்குத் தனது எதிர் காலத்தைத் தானே தீர்மானிக்கின்ற உரிமையை வழங்க வேண்டுமென்பது" உலக ஒன்றிய நாட்டுக் கழகத்தினதும் (U.N.O), அதன் உறுப்பாண்மை நாடுகளினதும் கொள்கை. இந்தக் கொள்கையின்படி, வழிவழி அரசுரிமையை இன்று இழந்து நிற்கும் தமிழ் ஈழத் தேசிய இனம் தனிநாடு கோருவதில் தவறோ அறியா மையோ அடாவடித்தனமோ கொஞ்சமும் இருத்தல் முடியாது. அங்குள்ள தமிழர்கள் தங்கள் கொள்கையையும் நிலையையும் திட்ட வட்டமாக அறிவித்து விட்டபின், மேலும் இந்த வகையில் காலத் தாழ்த்தத்தையும் அரசியல் சூழ்ச்சிகளையும் கையாள்வது, அவர்களை மேலும் மேலும் பல இன அழிவுக்கு உள்ளாக்கும் செயல்களாகவே கருதப்பெற வேண்டும். இந்த வகையில், உலக ஒன்றிய நாடுகளின் இலங்கைத் தூதர், 4—4—76-ஆம் நாளன்று அங்குள்ள ஒரு கருத் தரங்கின் பொழுது அறிவித்த கருத்துகளை இதனடியில் தருகிறோம். அதில் அவர் இப்போராட்ட நிலை பற்றித் தெளிவாகச் சொல்லியுள்ள தைக் கவனிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

"It will be foolish on our part to ignore the problems of Tamils. The issue in due course may take a very great turn. It is foolish for us to say that the Tamil State is not economically vioble. There are smaller countries than this which are independent nations. I speak with authority as I know international laws and I have served in international bodies.

We must at any cost avoid the creation of a seperate State. But if we pooh-pooh the idea, it may result in the creation of a seperate State. Let us also remember that there are 40 million Tamils just 20 miles away from north. Let us before warned about the consequences."

Sir. Senarath Gunawardene
(சேனரத் குணவர்த்தன)
(Former representative of Ceylon at U.N.O.) 4—4—76.

"தமிழர் சிக்கலைப் பற்றிப் புறக்கணிப்பாக உள்ளது, நாம் செய்யும் மூடத்தனமான செயலாகும். காலப் போக்கில் இந்தச் சிக்கல் மாபெரும் திருப்பங்களை ஏற்படுத்தக்கூடும். தனித்தமிழ்நாடு பொருளியல் வலுவுடையதாக இருக்காது என்று நாம் கூறுமகூற்று நம்மையே மடையராக்கும் கூற்றாகும். அவர்கள் கருதும் தனித்தமிழ் நாட்டை விடச் சின்னஞ்சிறிய நாடுகள் எத்தனையோ உலகில் தன்னுரிமை பெற்ற நாடுகளாகத் திகழ்கின்றன. அனைத்துலகச் சட்டங்களை நான் படித்திருக்கின்றேன். பல உலக நாடுகளின் நிறுவனங்களில் நான் பணியாற்றியிருக்கின்றேன். அதனால் நான் இதைப் பொறுப்புணர்வோடு கூறுகின்றேன். எப்பாடு பட்டாகிலும் நாம் தனிநாடு ஏற்படுவதைத் தவிர்க்க முயலவேண்டும். ஆனால் இக்கோரிக்கையை நாம் புறக்கணித்தால், அதன் விளைவு தனிநாடு உருவாவதில் சென்றுதான் முடியும. வடக்கிலிருந்து 20 கற்களுக்கு அப்பால் நான்கு கோடித் தமிழர்கள் இருப்பதையும் நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். எனவே விளைவுகளைப்பற்றி நாம் முன் எச்சரிக்கையுடன் இருப்பது இன்றியமையாதது."

வயவர். சேனரத் குணவர்த்தன.
(உலக ஒன்றிப்புக் கழகத்தின் முன்னாள் இலங்கைத் தூதர்.)

இறுதியாக நாம் சொல்ல விரும்புவது இதுதான்:

ஓர் இனத்தின் உட்கூறுகளைப் பிரித்தெடுக்கும் பொழுதோ, சிதைக்கும் பொழுதோ அந்த இனமே அழிந்து போகிறது. ஓர் இனத்தின் உட்கூறுகள் என்பன அதன் மொழி, பண்பாடு, நாகரிகம், இலக்கியம், அரசியல் சார்பு நிலைகள், பொருளியல் வலிமை, குமுகாயப் படிவுநிலை, அவை வழங்கும் நிலப்பரப்பு ஆகியவை ஆகும்.

‘தனிநாடு’ கோரிக்கை

அனைத்துலகச் சட்டப்படி குற்றமன்று!

‘‘அனைத்து நாடுகள் சட்டப்படி’’யும், உலக ஒன்றிய நாடுகள் (U. N, O.) அமைப்புறுதிப்படியும், கூட்டுச்சேரா நாடுகளின் 1964-ஆம் ஆண்டு அறிவிப்புப் படியும், தமிழ் மக்கள் தனிநாடு கோருவதற்கு முற்றிலும் தகுதி படைத்தவர்கள். சட்ட அடிப்படையான தன்னுரிமைக்காக, தன்மானமுள்ள தமிழர்கள் நடத்தும் தமிழக விடுதலைப் போராட்டத்தை இந்திய அரசு குற்றமாகக் கணிப்பது அடிப்படை மக்கள் உரிமையைப் பறிக்கும் சட்டப் புறம்பான செயலாகும்’’—என, ஈழத்தமிழ்நாடு அமைத்திட அரும் பாடுபட்டு வரும் தமிழர்களுக்கு உதவிகள் செய்து பெரும்புகழ் பெற்ற இங்கிலாந்து நாட்டின் ஆங்கில வழக்குரைஞர் இருவர், இந்தியத் துணைக்கண்ட அரசு கொணர்ந்த பிரிவினைத் தடைச் சட்டம் பற்றி

(முன் பக்கத் தொடர்ச்சி)

இவற்றுள் எந்த ஒன்று சிதைவுற்றாலும் அல்லது சிதைக்கப் பெற்றாலும், அச்சிதைவின தன்மையைப பொறுத்து, அவ்வினம் சிதைந்தோ, படிப்படியாகவோ கட்டாயம் அழிவுறும என்பது உறுதி; மிக உறுதி! இனி, இவ்வுண்மைக்கு மறுதலையாக, இயற்கையாகவோ செயற்கையாகவோ ஓர் இனத்திற்கு ஏற்பட்டு வரும் இச்சிதைவு நிலைகளை எந்த ஓர் இனம், தெரிந்து, தடுத்து நிறுத்திக் கொள்கின்றதோ, அந்த இனம் அந்த அழிவு நிலையினின்று தன்னைக் காத்துக்கொள்கிறது. இத்தற்காப்புநிலை. எந்த அளவுக்கு வலிமையும் விரைவும் கொண்டு விளங்குகின்றதோ. அந்த அளவுக்கு அதன் நிலைப்பாடும் உறுதி; மிக உறுதி என்க.

இவ்வுலக வியற்கை மெய்ம்மத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழரின் மேன்மைக்கு அடி கோலத் தவறுவார்களாயின், உலகெங்கணும் உள்ள தமிழர்களை ஒன்று படுத்திப் போராட வைக்கும் முயற்சியாக அஃது அமையும் என்று எச்சரிக்கையுடன் வலியுறுத்திக் கூறுகிறோம். அத்தகையதோர் எழுச்சியை இவ்வுலகம் விரைவில் காணத்தான் போகிறது. தமிழர் தங்களுக்கென்று ஒரு தனி நாட்டை அமைத்துக் கொள்ளத்தான் போகின்றனர் என்று உறுதி கூறிப் பாவேந்தரின்,

சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென்று ஊதூது சங்கே!
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!

என்னும் போர்ச்சங்க முழக்கத்துடன் இவ்வுரையை முடிக்கின்றோம்.

பிரிட்டனில் உள்ள 'தமிழர் முன்னேற்றக் கழகம்' (T.M.K.) கேட்டிருந்த சட்ட விளக்கம் பற்றி ஆய்ந்து கருத்தறிவித்துள்ளதாக, அங்கு நடந்து வரும் 'தமிழன் குரல்' (Voice of Tamils-An Official Newsletter Published by T. M. K.) என்னும் செய்தியேடு தன் ஆகத்து'77 இதழில் ஆசிரியவுரை எழுதியிருக்கின்றது. அக் கட்டுரையில் அதன் ஆசிரியர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

தங்கள் சொந்த ஊதியம் (நன்மை) கருதி அதிகாரத்தில் உள்ள வட இந்தியக் கட்சியினர் கொண்டு வந்த பிரிவினைத் தடைச்சட்டம் அம்பேத்கார் குழுவினர் வகுத்தளித்த இந்திய அரசியல் சட்டத்திற்கு முற்றிலும் புறம்பானதாகும். ஐம்பது ஆண்டுக் காலமாகத் தமிழ நாட்டுப் பிரிவினை கோரும் தமிழர்களைக் கருத்தில் கொண்டு கொணர்ந்த தடைச்சட்டமாகையால், அதற்குத் தமிழ்மக்களின் ஒப்புதல் இருந்தால் மட்டுமே, அப்பிரிவினைத் தடைச் சட்டத்திற்கு சட்டவலு இருக்க முடியும்.

'இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் அரசு தனது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதாகவும், நாடாளுமன்றத்தில் இயற்றப் பட்ட சட்டம் நாடு முழுமைக்கும் பொருந்தும் எனவும் கூறுவதை அனைத்து நாடுகள் சட்டத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளுகின்ற அதே நேரத்தில், அதே அனைத்து நாடுகளின் சட்டத்தின கீழ் தன்னாட்டு உரிமைக் கோரிக்கைகளும் அவற்றுக்கான போராட்டங் களும் சட்ட நிறைவானவை என்பதையும் எவரும் மறுத்தற் கியலாமற் போகும். எனவே தமிழன்—நிலப்பிரிவினைக்குக் குரல் கொடுக்கும் எவரும் அனைத்துநாட்டின் சட்டப்படி குற்றவாளியல்லர். **அம்பேத்கார் குழுவினர் ஆக்கிய 'இந்திய அரசியல் சட்டப்படி' இநதிய ஒன்றியத்தில் (Union) சேர்ந்துள்ள நாடுகள் பிரிந்து போகும் உரிமை வரையறுக்கப் பட்டிருப்பதால் இந்திய அடிப்படை அரசியல் சட்டப் படியும் குற்றமாகாது.**

கூட்டுச்சேரா நாடுகளின் இரண்டாவது மாநாடு 1964-ஆம் ஆண்டு செய்ரோவில் நடைபெற்றபோது **'தங்கள் அரசியல் உரிமையைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ள ஒவ் வொரு தேசிய இனத்திற்கும் தன்னுரிமை உண்டு'** என்ற தீர்மானம் அங்கு நிறைவேற்றப் பெற்றது. அத்தீர்மானத்தை இந்தியாவும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தங்களுக்கென ஒரு நாடும், அரசும் இல்லாத பாலத்தீனியர்களின் தன்னமைப்பு உரிமைக் கோரிக் கையை இந்தியா உட்படப் பெரும்பாலான நாடுகள ஏற்றுக்கொண்டி ருக்கும்பொழுது, தங்களுக்கென ஒரு நாடு இருந்தும், அரசுரிமை யற்றிருக்கும் தமிழர்களின் பிரிவினைக் கோரிக்கை எந்த வகையில் தவறுன்தாகும்?

இருநாடுகளின் சட்டமன்றங்கள் அல்லது மக்களால் தெரிவு செய்யப்பெற்ற படிநிகராளிகள் விரும்பிச் சட்ட

மியற்றி, ஒரே நாடாக இணைவதற்கு அதிகாரம் அளிப்பதன் வழியும், ஒருநாடு மற்ற நாட்டை வலிந்து கவர்ந்து கொண்ட (Seize by violence or occupy by force) வழியும், ஒரு நாடு தனது அரசுரிமையை மற்ற நாட்டிற்கு உரிமைப் படுத்திக் கொடுப்பதன் வழியும், இருநாட்டு மக்களின் விருப்பத்தின் வழியாகவும் தான், இருநாடுகள் ஒரு நாடாக ஆக முடியும்.

ஆனால் சேர, சோழ, பாண்டிய நாடு எனப் பண்டையக் காலத்தில் அழைக்கப் பெற்றுவந்த தமிழ்நாட்டு மக்களின் ஏற்பு ஒப்புதலை(acceptance)ப் பெறாமலேயே இந்தியத் துணைக் கண்டத்தினுள் வந்தேறியவர்களாகிய ஆரிய ஆட்சியாளர்களால் பிரிவினைத் தடைச் சட்டத்தை அவர்களின அடிமைகள் நிரம்பிய நாடாளு மன்றத்தில் தன் இன நலம் காத்திட இயற்றப்பட்டதாகும். அதனைத் தமிழ் மக்களின் தொண்டைக்குள் வலிந்து சட்டப் புறம் பாகத் (illegal) திணித்துள்ளனர்.

ஆங்கிலேயர்கள் 1947-ஆம் ஆண்டு இந்தியத் துணைக்கண்ட ஆட்சியுரிமையை ஆரியர்களிடம் ஒப்படைத்தமையால் தமிழர்கள் தமது நாட்டுரிமையை இழந்தார்களே தவிர, தமிழ்மக்களின் ஒப்புதல் படி அவர்கள் இந்திய ஒன்றியத்தில் (Indian Union) சட்டப்படி இணைக்கப்படவில்லை என்பது நமக்கு உதவ முன் வந்துள்ள சட்ட வல்லுநர்களின் (Q.C) கருத்தாகும.

இக்கருத்துகளின் அடிப்படையில் பிரிட்டன் தமிழர் முன்னேற்றக் கழகம் தமிழர்களுக்குக் கீழ்வரும் வேண்டுகோளைக் கொடுத்துள்ளது.

“நாங்கள் பிரிவினையாளர்கள் அல்லர்; நாங்கள் அனைத்திந்தியக் கட்சியினர் எனக்கூறிவரும் திரைப்படக் கவர்ச்சியும் அறியாமையும் மிக்க மக்களும், தமிழர்கள் எனக் கூறிக்கொள்ள வெட்கப்பட்டு, இந்தியத் தேசியம் பேசி அரசியல் ஊதியம் பெறும் வீடண அநுமன்களும், ‘நாங்கள் அன்று பிரிவினை கேட்டோம, இப்பொழுது உண்மையாகக் கேட்கவே இல்லை; உறுதியிட்டுக் கூறுகிறோம் நாங்கள் பிரிவினையாளர்கள் அல்லர்’ என்று சொல்லுக்குச் சொல், கூட்டத்திற்குக் கூட்டம் இந்திய தேசியத் திருப்பாட்டுப் பாடித் தாம் வாழ வழிதேடிக் கொண்ட தமிழ்ப் பதடிகள் சிலரும், எக்கட்சியும் சாராத தன்மானமுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களும், ஆசிரியப் பெருமக்களும், மாணவ மணிகளும்—ஆங்கில வழக்குரைஞர்களின் பரிந்துரையை எண்ணிப் பார்க்க வேண்டுமெனவும், கட்சிக் கட்டுப்பாட்டிற்குள் அடங்கிக் கிடப்போர் இதுநாள்வரை தமிழ் இனத்திற்குச் செய்த மாபெரும வஞ்சகத்திற்கு மன்னிப்புப் பெறும் வகையில், தாம் தமிழர் என்பதையுணர்ந்து தமிழ்த்தரையின் விடுதலைக்குப் போரிட வாருங்கள் எனவும் பிரிட்டன் தமிழர் முன்னேற்றக் கழகம் அறைகூவி அழைக்கிறது.” o

உலகத் தமிழ்க்கழக,

நான்காவது-

பொது மாநாடு

அழைப்பும், வேண்டுகோளும்!

அருந்தமிழ் அன்பரீர்! வணக்கம்.

உலகத் தமிழ்க்கழக 4-ஆவது பொது மாநாடு தி. பி. 2008 நளி 25, 26 காரி, ஞாயிறு (1977 திசம்பர் 10, 11) ஆகிய நாட்களில் சென்னை மாநகரில் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மாநாட்டில் கழகத் தலைவர் மூதறிஞர் பாவாணர் அவர்களும் மற்றும் கழகப் பொறுப்பாளர்களும், தமிழ்நாட்டு முதலமைச்சர், மாண்புமிகு ம. கோ. இராமச்சந்திரனார், கல்வி அமைச்சர் மாண்புமிகு ச. அரங்கநாயகம், உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு கா. காளிமுத்து, மேனாள் முதலமைச்சர் பர். கலைஞர் மு. கருணாநிதியார், தவத்திருக் குன்றக்குடியடிகளார், பாவலரேறு பெருஞ்சித்திரனார், பன்மொழிப்புலவர் கா அப்பாத்துரையார், தாமரைச்செல்வர் வ. சுப்பையா, பர். மெ. அழகனார், பர். ச. வே. சுப்பிரமணியம், பர். ஔவை, து. நடராசன், பர். பொற்கோ முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கருத்தரங்கம், பாட்டரங்கம், பட்டிமன்றம், ஊர்வலம், மலர் வெளியீடு, இசையரங்கம், நாடகம் முதலிய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் மாநாட்டில் கலந்து கொள்ள அணியமாகுங்கள். தங்கள் பொன்னான நன்கொடைகளை இன்னே அனுப்பி வையுங்கள்!

தங்கள் நல்லாதரவையும், ஒத்துழைப்பையும் நாடுகின்றோம்!

இன்னணம்

மாநாட்டுப் பொறுப்பாளர்கள்

அனைத்துத் தொடர்புகளுக்கும்.

மாநாட்டு அலுவலகம், 96/2 இராயப்பேட்டை-நெடுஞ்சாலை,
சென்னை-600 004,

செய்திகள்

கோவை மாவட்டம்

1. ஈரோடு-உந்து வண்டி நிலையத்தில் தென்மொழியன்பர் மகிழ்ச்சி :

கோவை மாவட்ட இரண்டாவது சுற்று நிகழ்ச்சிகளுக்காகப் பொறுப்பாசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார், கடந்த 19-8-77 இரவு அவிநாசி புறப்பட்டுச் சென்றார். மறுநாள் 20-8-77 காலை 9 மணியளவில். ஈரோடு உந்து வண்டி நிலையத்தில் ஆசிரியரவர்களை, திருவாளர்கள். குமர. நட வரச. ஈவப்பனார், பாவலர். தமிழ்க்குமரன், அ. இராமலிங்கம், அ. குமரன் முதலிய பதின்மருக்கு மேற்பட்ட தென்மொழியன்பர்கள் சந்தித்து, மிகவும் மகிழ்ச்சியுடன் ஒலியெழுப்பி மாலையணிவித்து வரவேற்றனர். அக்கால், அவர்கள் தென்மொழியின் அனைத்து முயற்சிகளுக்கும் தாங்கள் ஒத்துழைப்பு நல்குவதாகவும், தென்மொழியின் வளர்ச்சிக்குத் துணைநிற்பதாகவும் உறுதியளித்து ஆசிரியரிடம் வாழ்த்துரை வேண்டினர். ஆசிரியர், அவர்களின் அன்புணர்வுக்கும், வினையீடுபாட்டிற்கும் மகிழ்ச்சியும், நன்றியும் தெரிவித்து அவர்களை வாழ்த்தினார். பாவலர். தமிழ்க்குமரன், அது போழ்து உணர்வுப் பெருக்கோடு கீழ்வரும் வரவேற்புப் பாவை அங்கேயே உரக்கப்பாடி, ஆசிரியரை நெஞ்சாரத்தழுவி, கைகளிலும் முகத்திலும் முத்தங்கள் சொரிந்து தம் பேரன்பைப் புலப்படுத்தினார். அதன்பின் திரு. குமர. நடவரச. ஈவப்பனாரும் ஆசிரியருடன் புறப்பட்டு அவிநாசி சென்றார், திரு. தமிழ்க்குமரன் வாழ்த்துப்பா வருமாறு:

தென்மொழி யாம்நல்ல தீந்தமிழ் ஏடுகண்டீர்,
என்றன் இனத்தமிழர் ஏற்றமுற — நன்று!
வருக வருக வருகமா வீரா,
தருக்கர் நடுநடுங்கத் தான்!

தனித்தமிழ்க் காவலரே! தன்னேரில் தொண்டால்
இனித்தமிழ் வாழுமென்ற ஈடில் — கனித்தமிழீர்!
பொங்கும் உணர்ச்சிகண்டு பூரித்தோம் யாமுள்ளம்!
சிங்கமே நீவா சிலிர்த்து!

ஆண்ட தமிழர் அடிமைகளா? தூத்தூ!ஓ!
வேண்டாம் இழிவாழ்க்கை வீறுகொள்வீர்! — மீண்டு
பழிதுடைத்தே மேன்மைப் பயிர்விளைப்போம் என்று
சுழிபோட்டீர் நீர், வெற்றி சூழ்ந்து!

விடுதலைப் போரில் விளைத்திட வெற்றி
கெடுதலை நீக்கக் கிளர்ந்தே — அடுகளத்(து)
ஆர்க்கும் அரிமாவே! ஆண்மையனே! நின்வினையில்
சேர்ந்தோம் உணர்ச்சி சிலிர்த்து!

2. பெரியாயி பாளையம் (அவிநாசி), அரசு உயர்பள்ளி இலக்கிய மன்றத் தொடக்க விழா :

கடந்த 20-8-77 காரிக்கிழமை காலை 11-30 மணியளவில் அவிநாசி வட்டம் பெரியாயிபாளையம், அரசுயர் பள்ளியில் இலக்கிய மன்றத் தொடக்க விழா நடந்தது. பள்ளித் தலைமை யாசிரியர் திரு. பொன்னம்பலம், க. இ; ப. இ. அவர்கள் தலைமையுரைக்குப் பின், திருவாளர்கள். குமர. நடவரச. ஈவப்பனர், தென்மொழி. மறை நித்தலின்பனர் ஆகியோர் உரையாற்றினர். இறுதியில், 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்னுந் தலைப்பில், பாவலரேறு. பெருஞ்சித்திரனர் மாணவர்கள் மனங்கொள்ளுமாறு ஓர் அரிய உரையாற்றினர். இறுதியில், புலவர். திருவாட்டி. வி. சுலோச்சனு, தமிழாசிரியை, அவர்கள் நன்றியுரைக்குப் பின் இலக்கிய மன்றத் தொடக்க விழா இனிதே நிறைவுற்றது.

3. அவிநாசி, அரசுயர் பள்ளி இலக்கிய மன்ற விழா:

20-8 77 காரி பிற்பகல் $3\frac{1}{2}$ மணியளவில், அவிநாசி, அரசுயர் பள்ளியில், தலைமையாசிரியர், திரு. இரா. கோபால்சாமி. க. மு; ப. ஆ, அவர்கள் தலைமையில் இலக்கிய மன்றத் தொடக்க விழா நடை பெற்றது. விழாத் தொடக்கத்தில் வானெலி புகழ் இசைச்செல்வர் திரு. இரா. சுப்பிரமணியனர் அவர்கள் பாவேந்தர் தமிழ் வாழ்த்துப் பாடல்களைப் பாடினர். புலவர். இரா. வடிவேலன், க. மு, வரவேற் புரையாற்றினர், பின்னர், கோவை, சேரர் கொற்ற அமைப்பாளர். தென்மொழி. மறை. நித்தலின்பனர், குமர, நடவரச. ஈவப்பனர் ஆகியோர் நல்லுரைக்குப்பின், பாவலரேறு பெருஞ்சித்திரனர் 'பாவேந்தரும் சிறுவர்களும்' என்னுந் தலைப்பில் அரியதொரு சிறப்புரையாற்றினர். இறுதியில் தலைமைத் தமிழாசிரியர் மு. பழநிச் சாமி. க, மு. ப, இ. அவர்களின் நன்றியுரைக்குப்பின், 6 மணியளவில் விழா இனிது முடிவுற்றது.

4. தாராபுரம், மறைமலையடிகள் நூற்றுண்டு விழா:

சென்ற 21-8-77 ஞாயிறு காலை 11 மணியளவில் தாராபுரம் குறள் நெறி மன்றத்தார் நடத்திய 'தமிழ்க்கடல் மறைமலையடிகள் நூற்றுண்டு விழா' இனிது தொடங்கியது. விழாவிற்கு மன்றத் தலைவர். உயர்திரு. அ. சேனுபதி அவர்கள் தலைமை தாங்கினர். விழாத் தொடக்கத்தில் திரு. எசு. சினிவாசன் க. இ. அருள்வேட்டல் பாடினர். புலவர் திரு. மு. சிக்கந்தர் வாழ்த்துப்பா இசைத்தார். மன்றச் செயலர். புலவர். திரு. கு. கறுப்புச்சாமி வரவேற்புரை யாற்றினர். அடுத்து, தலைவர் முன்னுரைக்குப்பின் கோவை, இசைப் புலவர் திரு. சுந்தரராசனர் தொடக்கவுரையாற்றினர். பின் ''மறை மலையடிகள் நோக்கில்—தமிழ்மொழி' என்னுந்தலைப்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள் ஓர் உணர்வுரையாற்றினர். அத்துடன் முற்பகல் நிகழ்ச்சி முடிக்கப் பெற்றுப் பகல்விருந்து திரு. சேனுபதி அவர்கள் இல்லத்தில் அனைவர்க்கும் வழங்கப் பெற்றது. அதனை யடுத்துப் பிற்பகல், 3-மணியளவில், 'மறைமலையடிகள் நோக்கில்- சிவநெறி' என்னுந் தலைப்பில் திரு. இரா, இராமாநுசம். க. மு.

அவர்கள் சொற்பொழிவாற்றினர். திரு. ஞானபால்ராசு அவர்களின் நன்றியுரைக்குப் பின் கருத்தரங்க நிகழ்ச்சி முடிவுற்றது.

அடுத்து, மாலை 5-மணியளவில் திரு. குமர. நடவரச, ஈவப்பனார் தலைமையில் 'இயற்கையோடியைந்த இன்பத்தமிழ். என்னுந் தலைப்பில் பாவரங்கம் நடைபெற்றது. திருவாட்டி. கோவிந்தம்மாள் வாழ்த்துப்பா பாட, வரவேற்புரையை திரு. சௌதாமணாளன் நிகழ்த்தினர். பின்னர், 'வானம்' பற்றி, புலவர் மு. சிக்கந்தர் அவர்களும், 'நிலம்' பற்றி திரு. இரணியன் க. இ., அவர்களும் 'கடல்' பற்றி புலவர். திரு. சி. சுப்பையன். க.இ. அவர்களும் பாடினர். தலைவரின் முடிவுரைப் பாவிற்குப்பின், புலவர். திரு. பெ. சாமியப்பன் நன்றிப்பா நவில பாவரங்கம மாலை 6. மணியளவில் முடிவுற்றது.

பின்னர் விழாவின் இறுதி நிகழ்ச்சியாக, மாலை 6-30 மணி யளவில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை நடுவராகக் கொண்டு 'பிறமொழிக் கலப்பால் தமிழ்மொழி நலிவுறுமா? பொலிவுறுமா?' என்னும தலைப்பில் பட்டி மன்றம் தொடங்கியது. நலிவுறும் என்னும் அணிக்கு திரு. இராமாநுசம் க.மு. தலைமை தாங்கவும், திருவாளர்கள் காந்தி, ந. முத்துக்குமரன். அறி.இ; ப.இ; அவர்கள் துணை நின்று வழக்காடவும் செய்தனர். பொலி வுறும் என்னும் அணிக்கு பாவலர் திரு. சிற்பி. பாலசுப்பிர மணியம். க. மு. அவர்கள் தலைமை தாங்கவும், திருவாளர்கள் எம். எசு. பெரியசாமி க. மு; ப. இ; வி. துரைச்சாமி. க. இ; இலக். இ. அவர்கள் துணை நின்று பொருதவும் செய்தனர். பட்டி மன்ற அவை கற்றோர் நிறைந்து களைகட்டி நின்றது. இரண்டு அணியினரின் தருக்கங்களும், கருத்துத் தொடுப்பு முறைகளும் அவையோர்க்கு உணர்வூட்டிக் கிளுகிளுக்கச்செய்தன. இடையிடைப் பட்டி மன்ற நடுவரின் கருத்து விளக்கங்களும். மோதல் தடுப்புகளும், ஊக்க உரைகளும் அணியினர்க்கு மேலும் மேலும் ஆர்வத்தை யூட்டின. அணியினரின் அளவையாடல்களுடன் அவையோரும் இடை புகுந்து கருத்துகளைப் பரிமாறிக் கொண்டது, தலைப்புக்கு ஒளி யேற்றியது. இறுதியில் நடுவர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் இரண்டு அணியினரின் கருத்துகளையும் நன்கு விளக்கி, தமிழ் மொழியின் செம்மாந்த சிறப்பு நிலைகளையும், தலைமைத் தனிமை யையும் எடுத்துக் காட்டி, தீர்ப்பை அவையினரின் முடிவுக்கே விட்டு விட்டார். இப்பட்டி மன்றம், கடந்த மாதம் இதே தலைப்பில் திருப்பூரில் நடைபெற்ற பட்டிமன்றத்தைவிட மிகச் சிறப்பாக அமைந்திருந்தது என்றும், தாராபுரத்தில் இதுபோல் ஓர் இலக்கிய நிகழ்ச்சி இதுவரை நடந்ததில்லை என்றும் அவையினர் பேசிச் சென்றது குறிப்பிடத்தக்கது. இறுதியில், இரவு 12-30 மணி யளவில், மன்றத் துணைச்செயலர் புலவர், திரு ஆ. சபேசன் நன்றியுரைக்குப்பின் கூட்டம் இனிது நிறைவுற்றது. கூட்ட

முடிவில், அவையில் அமர்ந்திருந்த தாராபுரம் வருவாய் ஆய்வாளர், உயர்திரு, நா. மு மகாலிங்கம் க. இ. அவர்கள், ஆசிரியரிடம் நேரில் வந்து, தென்மொழி வளர்ச்சிக்கென உருபா ஐம்பதை அன்பளிப்பாகக் கொடுத்து, ஆசிரியரை வாழ்த்திச் சென்றூர்கள்.

5. கோபிசெட்டி பாளையம் சிந்தனையாளர் மன்றப் பொதுக்கூட்டம் :

சென்ற 24-8-77 அறிவன் மாலை 7-30 மணியளவில் கோபி செட்டி பாளையம் சிந்தனையாளர் மன்றப் பொதுக்கூட்டம், மன்றச் செயலர் திரு. கோ. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையில், புதுச்சாமி கோயில் திடலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு உள்ளூர் வெளியூர்ப் பொது மக்களும் ஆசிரியப் பெருமக்களும், கல்லூரிப் பேராசிரியர்களும், வழக்கறிஞர்களும், புலவர்களும், மாணவர்களும் திரளாக வந்திருந்தனர். தொடக்கத்தில் திருவாளர்கள். பு. கா. பழனியப்பன், தென்மொழி ப. துரையரசன். க. இ., குமர, நடவரச. ஈவப்பனூர், தென்மொழி, மறை. நித்தலின்பனூர் ஆகியோர் உரையாற்றினூர். தொடக்கத்தில் தலைவர் அவர்கள் இலங்கைத் தமிழர் சார்பில் ஓர் இரங்கல் தீர்மானத்தைப் படிக்கவும், கூட்டத்தில் இருந்த பொதுமக்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமையம் அமைதியாக நின்று, இலங்கையில் தமிழினத்திற்கு நேர்ந்த கொடுமைகளுக்காக வருத்தம் தெரிவித்தனர்.

இரங்கல் தீர்மானம்

அண்மையில் இலங்கையில் பலவகையிலும் கொடுமைகளுக்கும். கொலைகளுக்கும், சொத்திழப்புகளுக்கும் ஆளாகித் துயர்ப்படும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுக்காக இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவ்வகையில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காக ஒரு நிமையம் எழுந்து நின்று அமைவுத் துயரத்தைத் தெரிவிக்கும்படி பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றது.

இதனையடுத்துப் புலவர் திரு. எழில்வேலன் இல. இ; அவர்கள், உரையாற்றிக் கீழ்வரும் வேண்டுகோள் தீர்மானத்தைப் படித்துக் காட்டி நிறைவேற்றினூர்கள்,

வேண்டுகோள் தீர்மானம்

அண்மையில், இலங்கையில், சிங்களவரால் தமிழர்களுக்கு நேர்ந்த கொள்ளைகள், கொலைகள், பொருளிழப்புகள், வீடிழப்புகள் முதலிய துன்பமான நிலைகளைக் கேட்டு இங்குள்ள தமிழர்கள், பெருந் துயரமும், மனக்கிளர்ச்சியும் பெற்றிருக்கிறூர்கள், என்பதைத் தெரிவித்து, விரைவில் இந்திய அரசு இவ்வகையில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு, தமிழ் இனத்திற்கு நேர்ந்த இக்கொடுமைகளைப் போக்குமாறு மாநில அரசு, நடுவணரசைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்பதை இக்கூட்டம் வலியுறுத்துவதுடன், தலைமை

அமைச்சர் உயர்திரு. மொரார்ச்சி தேசாயையும் நேரடியாக வேண்டிக் கொள்கின்றது.

அதன் பின்னர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் இரவு 10-மணியளவில் 'தமிழன் நேற்று—இன்று—நாளை' என்னுந் தலைப்பில் உரையாற்றத்தொடங்கி 2-30 மணி நேரம் நீண்ட, நெடிய ஓர் உணர்வுரையாற்றினார்கள். பொதுமக்கள் ஒரு சிறு அசைவும் இன்றி இறுதிவரை மிகவும் அமைதியுடன் இருந்து கேட்டது, குறிப்பிடத்தக்கது. இரவு ஒரு மணியளவில் வழக்கறிஞர் திரு. கே. எசு. ஆனந்தம் அவர்கள் இல்லத்தில் அனைவர்க்கும் விருந்தளிக்கப் பெற்றது. அக்கால் புலவர் திரு. கோபி அரசு அவர்கள். வாழ்த்துப் பாக்கள் சிலவற்றைப் பாடிப்பாவலரேறு அவர்களைப் பாராட்டினார்கள். அவற்றுள் சில வருமாறு:

பேராண்மைச் சொல்லின் பெருஞ்சித் திரனாரே!
காராண்மை போலுழைக்கும் கண்ணியரே!—ஊரோங்க
உண்மைப் பகுத்தறிவை ஊக்கி, வளர்த்துவரும்
திண்மைநிறை திரருக்கெம் வாழ்த்து!

பணமே குறியாய்ப் படித்தவரும் பாழாய்க்
குணக்கேடே ஓங்கும் கொடுமை—கணக்கில்லாத்
தாயகமாம் எங்கள் தமிழகத்தின் மக்களுக்கே
தூயவழி தந்தீர் துணிந்து!

சாதிமத பேதச் சமத்துவத்தை உண்டாக்கி
நீதி நெறிமுறைகள் ஒன்றாகிப்—பேதமிலா(து)
எந்தமிழர் தம்பெருமை ஏற்றம் நிறைந்தினிதாம்
ஒண்புகழில் வாழவைப்பீர் நீர்!

சிந்தனையின் மேன்மை சிறப்போ டியங்கிடவும்
எந்தவகைத் துன்பங்கள் ஏற்றமுடன்—வந்தாலும்
தாங்கும் உயர்ந்த தகுதி உடையவராய்
ஓங்கிடவே சொன்னீர் உவந்து!

வாழ்த்துப் பாக்களைக் கோபிஅரசு பாடியளித்தவுடன், ஆசிரியவர்கள், தம்மைப்பற்றி வீண்புகழ்ச்சியுரைகளைப் பாடுவதை விட, மக்களைப் பற்றிப்பாடி, அவர்களுக்கு நல்லறிவும் நல்லுணர்வும் கொளுத்தும்படி வேண்டிக் கொண்டார்கள்.

மதுரை மாவட்டம்

6. கெ. கல்லுப்பட்டி, உயர்நிலைப்பள்ளி, இலக்கிய மன்றத் தொடக்க விழா:

கழிந்த 22-8-77-ஆம் நாள் பிற்பகல் 3-30 மணியளவில், பெரிய குளம் வட்டம், கெங்குவார் பட்டிக் கல்லுப்பட்டி உயர்நிலைப் பள்ளியில் இலக்கிய மன்றத் தொடக்க விழா நடைபெற்றது. விழா, வெற்றிலைக்குண்டு (வத்தலக்குண்டு) அரசுயர் பள்ளித் தலைமை யாசிரியர் திரு. நா. செயராமன் க.இ; ப இ; அவர்கள் தலைமை

தாங்கினார். திரு. பெ. தியாகராசன். க.இ; அறி.இ;ப.இ.அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். பின்னர் திருவாளர் குமர. நடவரச. ஈவப்பனார், தென்மொழி. மறை. நித்தலின்பனார் உரை நிகழ்த்தினர். இறுதியில் பாவலரேறு. பெருஞ்சித்திரனார் அவர்கள் நீண்ட சிறப்புரையாற்றி, மாணவர் இலக்கிய மன்றத்தைத் தொடக்கி வைத்தார்கள். முடிவில் திரு. இரா. இராமமூர்த்தி. அறி.இ; ஆ.ப. அவர்கள் நன்றியுரைக்கக் கூட்டம் மாலை 6-மணியளவில் நிறைவுற்றது. தென்மொழி வளர்ச்சிக்கென கல்லைப் பெருஞ்சித்திரன் தொகுத்த நன்கொடை உருபா ஐம்பத்தொன்று ஆசிரியரிடம் தரப்பெற்றது. இரவு, தமிழ் ஆசிரியர் திரு தே. இரா. கோபால் க.இ. அவர்கள் இல்லத்தில் ஆசிரியர்க்கு விருந்து தரப்பெற்றது.

திருச்சி மாவட்டம்

7. புலவர். பன்னீர்ச்செல்வன் — தமிழரசி திருமணம், முக்கொம்பு :

கடந்த 16-8-77 வெள்ளி காலை 10-மணியளவில், திருச்சி, முக்கொம்பு திருமண மண்டபத்தில், புலவர். பழ. பன்னீர்ச்செல்வன் செல்வி. தமிழரசி இவர்கள் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப் பாவலரேறு. பெருஞ்சித்திரனார் தலைமை தாங்கினார். புலவர். திரு. செல்ல-நடராசன் திருவாளர்கள். பொ. சுந்தரராசு, (ஊ. ம. தலைவர். கொடியாலம்), தென்மொழி மறை. நித்தலின்பனார். ந. பெரியசாமி. முன்னாள் அமைச்சர் அன்பில். தருமலிங்கம் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரை செய்தார்கள். இன்சுவை விருந்துடன் திருமண நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

பொறுப்பாசிரியரைக் கூட்டத்திற்கழைக்கும் அன்பர்கள் கவனத்திற்கு !

பொறுப்பாசிரியர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை நிகழ்ச்சிகளுக்கு அழைக்க விரும்பும் அன்பர்கள் கீழ்க்காணும் நெறிமுறைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டுமாய் மிகவும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கட்டணங்கள்

1. பொது மன்றங்கள், தமிழ் வளர்ச்சிக் கழகங்கள், கல்லூரிகள், திருமணங்கள், பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றுக்கு ஆசிரியர் அவர்களை அழைக்க விரும்பும் அன்பர்கள், சொற்பொழிவுத் தொகையாக உருபா நூறும், நிகழ்ச்சிகள் நடத்தும் இடங்களுக்கும் சென்னைக்கும் உள்ள போக்குவரத்துச்செலவும் (அவ்வப்பொழுது எழுதிக் கேட்டுக் கொள்ளலாம்) தருதல் வேண்டும். இத்தொகைகளை முழுமையாகவோ, பகுதியாகவோ முன் கூட்டியே விடுத்து ஆசிரியர் ஒப்புதல் பெற்ற பின்னரே அறிக்கைகள் அடித்தல் நன்று. எச்சத் தொகையைக் கூட்ட முடிவில் கொடுத்தல் வேண்டும்.

2. உலகத் தமிழ்க் கழகச் சார்பாக அமைக்கப் பெறும் கூட்ட நிகழ்ச்சிகளாயின், போக்குவரத்துச் செலவுத் தொகையுடன் உருபா எழுபத்தைந்து விடுத்தல் வேண்டும்.

3. உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் சார்பாக நடைபெறும் நிகழ்ச்சிகளாயின், போக்குவரத்துச் செலவுத் தொகையுடன் உருபா ஐம்பது விடுத்தால் போதும்.

4. ஆசிரியர் ஓர் ஊருக்கு வரும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவ்வூர்ப் பகுதிகளில் கூட்டம் அமைக்க விரும்புகின்றவர்கள், குறிப்பிட்ட அவ்வூருக்கும் கூட்டம் நடைபெறவிருக்கும் இடத்திற்கும் இடையிலாகும் போக்குவரத்துச் செலவை மட்டும் தந்தால் போதும். சொற்பொழிவுத் தொகையில் மாறுதல் இல்லை.

5 சிலர் ஒரு நிகழ்ச்சிக்கு இசைவு பெற்று விட்டு, ஒரே பொழுதில், இரண்டு தொடர் நிகழ்ச்சிகளாக வைத்து விடுகிறார்கள். (எ.டு. கருத்தரங்கைத் தொடர்ந்து பட்டி மன்றமோ, பாட்டரங்கமோ.) இந்நிலை மிகவும் தவிர்க்கத் தக்கதாம். இந்நிலை தேவையானால், இவற்றை இரண்டு நிகழ்ச்சிகளாகக் கருதி, அவற்றுக்கான இசைவை முன் கூட்டியே பெறுதல் வேண்டும்.

6. ஆசிரியரைக் கொண்டு பாட்டரங்கம் அமைக்க விரும்பும் அன்பர்கள், பாட்டரங்கத் தொகை உருபா இருநூறும் போக்குவரத்துக் கட்டணமும் தருதல் வேண்டும். பாட்டரங்கம் ஏறும் பாவலர்களின் பாடல்களை இரண்டு நாட்களின் முன்பே ஆசிரியவர்களின் கைகளில் கிடைக்கும்படி பார்வைக்கு விடுத்து வைத்தல் வேண்டும்.

தங்குவதற்கான ஏற்பாடுகள்

1) ஆசிரியர் அவர்கள் நிகழ்ச்சிகளுக்கு வரும் பொழுது, அவர்களுக்காகும் தங்குமனைச் செலவுகளும், உணவுச் செலவுகளும், கூட்டம் அமைப்போரைப் பொறுத்தனவே.

2. ஆசிரியர் அவர்கள் தங்குவதற்கென, ஆங்காங்குள்ள அரசினர் வழிப்போக்கர் விடுதிகளிலேயே (T.B) ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். வழிப்போக்கர் விடுதிகள் இல்லாத ஊர்களிலும், அல்லது ஊருக்கு வெளியே இரண்டு கற்களுக்கு மேல் வழிப்போக்கர் விடுதிகள் அமைந்திருக்கும் ஊர்களிலும், பொதுவிடுதிகளில் (Lodges) ஏற்பாடு செய்தல் வேண்டும்.

3. தனியார் வீடுகளில் ஆசிரியரவர்களைத் தங்கவைப்பதை அறவே தவிர்த்தல் வேண்டும். தங்குவதற்கு வேறு எந்த விடுதியும் இல்லாத மிகச்சிறிய ஊர்களில், அண்டை அயல் ஊர்களில் தங்கச் செய்யலாம். இவ்வாய்ப்புகள் ஒன்றுமற்ற நிலையில் ஆசிரியர் அவர்கள் கருத்துப்படி நடந்து கொள்ளக்கேட்டுக் கொள்கின்றோம்.

பிற நலன்கள் :

1. ஆசிரியரவர்களுக்குத் தனியார் வீடுகளில் உணவேற்பாடு செய்தல் கூடாது. பொது உணவு விடுதிகளில் உள்ள உணவையே, முடிந்த அளவில் ஏற்பாடு செய்தல் வேண்டும். இவ்வகையில் அவ்வப்

பொழுது ஆசிரியர் அவர்களின் கருத்தறிந்து நடந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

2. ஆசிரியர் அவர்கள் தங்குமிடங்களில், அன்பர்கள் மிகுந்த அளவில் கூடியிருந்து, இரவு பகல் எந்நேரமும் ஓய்வின்றிக் கலந்துரையாடலும், கருத்துரையாடலும் செய்வதால், ஆசிரியவர்களின் உடல் நலம் பெரிதும் சீர்கெட நேர்கின்றது. இதனை அன்பர்கள் உணர்ந்து கொண்டு, நிகழ்ச்சிகளுக்காக ஆசிரியவர்கள் வந்து தங்கியிருக்கும் நேரங்களில், நிகழ்ச்சியில்லா வேளைகளில், காலை 9 மணிக்கும் பகல் 12 மணிக்கும், இடைப்பட்ட நேரங்களில் மட்டும் ஆசிரியரின் முன்னிசைவு பெற்று, அவர்களுடன் கலந்துரையாடும்படி கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் எவ்வகையிலும், எந்தச் சூழ்நிலையிலும் இரவு 10 மணிக்குமேல் அவர்களுக்குத் தொல்லை தரவேண்டாம் என்றும் வேண்டிக் கொள்கின்றோம்.

3. ஆசிரியவர்களுக்காக, அவர் தங்குமிடங்களில், அன்பர்கள் பழங்கள் வாங்கிவருவதோ, பிற உணவுப் பண்டங்கள் வாங்கி வருவதோ தேவையற்ற செலவுகளாகும். அவற்றைக் கட்டாயம் அன்பர்கள் தவிர்க்க வேண்டுகிறோம்.

4. கூட்டங்களில் மாலையிடப் பெறுவதையும் ஆசிரியவர்கள் விரும்பவில்லை. எனவே, அதனையும் அன்பர்கள் தவிர்த்தல் நன்று.

பிற பொது நிலைகள்

1. ஆசிரியரவர்களின் சொற்பொழிவுகள் இற்றை நிலைக்கு மிகவும் இன்றியமையாத பயன்களைத் தருவனவாகையால் பொது நிகழ்ச்சிகளை நன்கு விளம்பரப் படுத்துவது மிகவும் நல்லது.

2. அவர்கள் பேசும் நிகழ்ச்சிகளை அரசியல் கூட்டங்கள்போல் அமைக்காமல், நாளுக்கு ஒன்றாக, முற்பகலிலோ, மாலையிலோ, முன்னிரவிலோ அமைப்பது மிகவும் பயன்தரத் தக்கதாகும், முன்னிரவுக் கூட்டம் (இரவு 8-க்கு மேல் இரவு 12-க்குள்) மிகவும் சிறப்புடையதாகும்,

3. அவர்கள் பேசும் நிகழ்ச்சிகளில், பெரும் அளவில் பிறரைப் பேசச் செய்யாமல், ஓரிருவரை மட்டுமே பேசச் செய்து, அதன்பின் ஆசிரியரவர்களை உரையாற்றச் செயவது மிகுந்த பயன் தருவதாகும். ஆசிரியரவர்களை மட்டுமே தனியாகப் பேசச் செய்வது மிகவும் சிறப்பாகும்.

4. அன்பர்கள் இவற்றை மிகக் கவனமாகக் கருத்தில் கொண்டு ஆசிரியரவர்களின் கூட்ட நிகழ்ச்சிகளைச் செவ்வையாக ஏற்படுத்தி, நம் கால, இன முயற்சிகளைச் சிறப்புற ஆற்றுவதற்குத் துணையாக நிற்கும்படி, பல்லாற்றானும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள் கின்றோம்.

மா. பூங்குன்றன்,
'தென்மொழி'

தொடர் : 2

பாவேந்தர் விழாப் பாட்டரங்கம்

—பெருஞ்சித்திரனுர்

பின்னுரை

பாவேந்தர் கருத்துநலன் பாப்புலவர் சொன்னுர்!
  பழகுதமிழ்ச் சொல்லருமை கேட்டிருந்தோம் நாமும்!
பூவேந்தும் நறுந்தேனைச் சுவைத்திடுந்தே னீக்கள்
  போலன்றே நாம்சுவைத்தோம்! புலவரெலா'ம் வாழ்க!
சாவேந்திச் சென்றதெனப் பாவேந்தைச் சொன்னுர்!
  சரியில்லை என்போம்நாம்! செந்தமிழ்த்தீம் புலவர்
நாவேந்தி வாழ்கின்ருர் பாவேந்தர்! உண்மை!
  நாடெல்லாம் வீடெல்லாம் அவர் வாழ்கின் ருரே! 16

செந்தமிழ்க்கே அவர்பிறந்தார்; செந்தமிழ்க்கே வாழ்ந்தார்;
  செந்தமிழ்க்கே மூச்சுயிர்த்தார்; செந்தமிழ்க்கே பேசிச்
செந்தமிழ்க்கே அவருழைத்தார்; செந்தமிழாய் நின்ருர்;
  செந்தமிழ்க்கே ஒளியேற்றிச் செந்தமிழ்க்கே மாய்ந்தார்!
செந்தமிழ்க்கே பாவேந்தால் செழும்பெருமை அன்ருே!
  செந்தமிழ்க்கே நாமிருப்போம் என்னில்அவர் கொடையே!
செந்தமிழ்க்கே வாழ்ந்தவரும் செத்தொழிவ துண்டோ?
  செந்தமிழும் வாழும்வரை அவர்தமிழும் வாழும்! 17

1 இயற்கை

இருக்கின்ற பாவலர்கள் இருகோடி என்ருல்
  இயற்கைப்பா வலர்அவருள் இருபதுபேர் இருக்கும்!
கருக்குழியில் ஒளியேறி உணர்வேறித் திருவில்
  கற்பனையாம் பொலிவேறிப் பாட்டுணர்வும் ஏறி,
உருக்கொண்டு தாய்மடிமேல் வீழ்ந்தபின்னே அவளின்
  ஒளிமார்புக் காம்புவழித் தமிழேறிப் பாய்ந்தால்,
தெருக்கடையில் இறங்குகையில் பாட்டுவரும் தெளிவீர்!
  தெம்மாங்கு செந்நாவில் எழுந்துவிளை யாடும்! 18

அன்னவரைத் தாம்இயற்கைப் பாவலர்கள் என்போம்!
  அப்படித்தான் 'கனகசுப்பு ரத்தினம்' பா வேந்தன்'!
இன்னவரைப் போல்இயற்கை இயற்றிவைத்த பேருள்
  இவரவரின் ஆசானுக் கர்சான்என் றுரைப்போம்!
முன்னவரைப் பாரதியைக் குறைசொல்ல வில்லை!
  மூச்சிலிவர் தமிழுயிர்த்தால் பேச்சிலவர் என்போம்!
என்னபடி பார்த்தாலும் பாரதிபாட் டுக்கே
  ஏழுபடி மேலிருக்கும் பாவேந்தன் பாட்டு! 19

நடுநிலையில் லாமலிதை நாம்சொல்ல வில்லை!
நாமவரின் வழிவந்த நன்றியுரை இல்லை!
கெடுநிலையில் பார்ப்பனர்கள் பாவேந்தர் பாட்டைக்
கீழ்வைத்துப் பேசுகின்றார்; நாமவர்க்குச் சொல்வோம்!
தொடுநிலையில் பாட்டுணர்வில் தோய்கின்ற நிலையில்
தூய்தமிழை மனங்கொண்டு பாடுகின்ற நிலையில்
நெடுநிலையில் மலைப்புனலாய்ப் பொழிந்திருக்கும் நிலையில்
நிலைத்திருக்கும் நிலையினிலே பாவேந்தன் வெல்வான்! 20

தன்விளக்கம் பாடுகின்றான் பாவேந்தன் இங்கே!
தமிழ்ப்புலவன் செம்மாப்பைக் கேளுங்களிப் பாட்டில்!

"சீர்த்தியால் அறத்தால் செழுமையால் வையப்
போர்த்திறத்தால் இயற்கை புனைந்ததோர் உயிர் நான்!"

இன்விளக்கம்! இதுவாகும் 'இயற்கைதந்த உயிர்நான்'
என்றுரைக்க வில்லையவன்; புனைந்தஉயிர் என்றான்!
என்விளக்கம்! உணர்ந்தீரா? இருக்கும் உயிர் யாவும்
இயற்கைத்தாய் செய்தெடுத்து வீசிவிட்ட உயிராம்!
என்வியப்பு! பாவேந்தன் உயிரைமட்டும் நன்றாய்
எழில்சீர்த்தி அறம்செழுமை வீரத்தொடு புனைந்தாள்! 21

பாவேந்தன் சொல்லுகின்றான், யாரிவன்போல் சொன்னார்?
பாருங்கள் மேன்மேலும் அவன்கையின் வண்ணம்!
நாவேந்திப் பிறர்சொன்னால் உணர்வேந்திச் சொல்வான்!
நல்லதமிழ் பிறர்சொன்னால் உயிர்த்தமிழைச் சொல்வான்!
காவேந்திக் கொண்டிருக்கும் பூவேந்தித் தேனைக்
களிமதர்ப்பக் குடித்திசைக்கும் தேனீப்போல் தமிழின்
ஈவேந்தித் தருகின்றான் செந்தமிழாய்! பாவாய்!
இயற்கையினை இவனைப்போல் படம்பிடித்த தெவரே? 22

'கடல்நீரும் நீல்வானும் கைகோக்கும்' என்றே
கற்பனைக்கும் கற்பனையாய் யார்சொன்னார்! கேட்பீர்! 23/1

"கடல்நீரும் நீல வானும்
கைகோக்கும்! அதற்கி தற்கும்
இடையிலே கிடக்கும் வெள்ளம்!
எழில்வீணை! அவ்வீ ணைமேல்
அடிக்கின்ற காற்றே வீணை
நரம்பினை அசைத்தின் பத்தை
வடிக்கின்ற புலவன்! தம்பி
வன்கடல் பண்பாடல் கேள்!

உடலிலவன் நறுந்தென்றல் உணர்வுபெற்றுப் பேசும்
ஒருபாட்டைக் காட்டுகிறேன் கேளுங்கள் நன்றாய்! 23/2

"களிச்சிறு தும்பி பெற்ற
கண்ணுடிச் சிறகில் மின்னித்
துளிச்சிறு மலர்இ தழ்மேல்
கூத்தாடித் துளிதேன் சிந்தி
வெளிச்சிறு பிள்ளை யாடும்
பந்தோடு விளையா டிப்போய்க்
கிளிச்சிற காடை பற்றிக்
கிழக்கின்றாய் தென்ற லே,நீ!"

அடல்மிகுந்த கடுங்காட்டை அவன்காட்டு கின்றான்!
ஆனைஒன்றே இளமரத்தை முறித்திடுமாம்—பாரீர்! 23/3

"ஆனைஒன் றிளம ரத்தை
முறித்திடும்; ஆந்தைக் கூட்டைப்
பூனைஒன் றணுகும்; அங்கே
புலிஒன்று தோன்றும்; பாம்பின்
பானைவாய் திறக்கக் கண்டு
யர்வுமே பறக்கும்! கன்றோ
மானைக்கா ணுது நிற்கும்!
அதைஒரு நரிபோய் மாய்க்கும்!

தொடவில்லை; தொட்டாலே விடவில்லை என்பார்;
தொடாதெதும் பாவேந்த னிடமில்லை என்பேன்! 23—4

கூரையின்மேல் குரங்கூசல் காட்டுகின்றான் காணீர்!
குறத்தியர்கள் ஒளியழகைப் பேசுவதைக் கேளீர்! 24/1

"செருந்தி, ஆச்சா, இலந்தை
தேக்கீந்து கொன்றை யெல்லாம்
பெருங்காட்டின் கூரை! அந்தப்
பெருங்கூரை மேலே நீண்ட
ஒருமூங்கில்; இருகு ரங்கு
கண்டேன் பொன்னூசல் ஆடல்!"
'குறத்தியர் கவண்எ டுத்துக்
குறிபார்க்கும் விழி,நீ லப்பூ!
எறியும்கை செங்காந் தட்பூ
உடுக்கைதான் எழில் இடுப்பே!

நீரையவன் காட்டுகின்றான்! அந்நீரில் மேயும்
நெளிவை அவன்காட்டுகின்றான்! அருவியதும் பாரீர்! 24/2

'பெருஞ்சிங்கம் அறைய வீழும்
யானைபோல் பெருகிப் பாய்ந்து, வரும் வெள்ளம்!'

"இருகரை ததும்பும் வெள்ள
நெளிவினில் எறியும் தங்கச்
சரிவுகள்! நுரையோ முத்துத்
தடுக்குகள்! சுழல்மீன் கொத்தி
மரகத வீச்சு! நீரில்
மிதக்கின்ற மரங்க ளின்மேல்
ஒருநாரை வெண்டா மரைப்பூ!"

"அருவிகள் வயிரத் தொங்கல்!
அடர்கொடி பச்சைப் பட்டே!
குருவிகள் தங்கக் கட்டி!
குளிர்மலர்; மணியின் குப்பை!"

நீரினுள்ளே கதிர்நுழைந்து நெளிவதைச்சொல் கின்றான்!
நீங்களுந்தாம் பார்த்திருப்பீர்! நினைவுவந்த துண்டா? 24/3

'பின்னிய ஆடை காற்றில்
பெயர்ந்தாடி அசைவ தைப்போல்
நன்னீரில் கதிர்க லந்து
நளிர்கடல் நெளிதல் கண்டேன்!

வேரினுள்ளே தமிழ்பாய்ந்தால், தமிழெருவைப் போட்டால்
விளைவெல்லாம தமிழ்ப்பாதான்! வேறென்ன
தோன்றும்? 24–4

தோற்றுகதிர் கடல்மிசையில் எழுந்ததுவும் தங்கத்
தூறல்வந்து விழுந்ததென்பான்! ஒளிவெளியாம் என்பான்!
'மேற்றிசையில் அனற்காட்டில் செம்பரிதி வீழ்ந்து
வெந்துநீ றாகாமல் இருத்தல்வியப்' பென்பான்!
ஏற்றுகின்ற உவகையெல்லாம் இயற்கையினைக் காண்பான்!
எடுத்துக்காட் டங்கொன்றும் இங்கொன்று மாக!
போற்றுங்கள் கேட்டுவிட்டுச் சிறந்திருந்தால்! அன்றேல்
புலவன்எவன், மற்றவனைக் காட்டிவிட்டுப் போங்கள்! 25

"உரித்தநற் றாழம் பூவின்
நறும்பொடி உதிர்ந்த தைப்போல், பெருமணல்"

"முதலைகள் கிடப்பதைப் போல்
சின்னதும் பெரிதுமான வெடிப்புகள்!"

"கீரியின் உடல்வண் ணம்போல்
மணல் மெத்தை"

"காலுக்குப் புன்னையிலை போலும் செருப்பு"

"வெண்தா மரையில் விளையாடும் வண்டுபோல்
கண்தான் பெயர, நீ என்ன கருதுகின்றாய்?"—தாலாட்டு

"புன்னை மலர்க்காம்பு போன்றதோர் சிற்றடிப் புரு!

"கிளிக் கழுத்தின் பொன்வரிபோல் அரும்பும் மீசை!

"பொரியலோ பூனைக் கண் போல் பொலிந்திடும்"

"கறந்தபால் நிறந்திகழ் கவின்உடை பூண்ட
மருத்து விச்சி"

"காட்டுமுயற் காதிலையும் களியானைத் துதிக்கை
அடிமரமும் வானில்
நீட்டுகிளை கொய்யா"

"ஓடுபிளந்தசெம் மாதுளைபோல் உதடு"

"காதோரத்து வண்டுவழி"

"ஓடை மலர் முகம்"

"காடு சிலிர்க்கும்படி மேலாடு முன்தானை"

(முழுப்பாட்டு வேண்டுமா?)

ஓடு பிளந்தசெம் மாதுளை போல் உதட்டில்
உள்ளம் விளைத்தநகை மின்னவும்—கா
தோரத்து வண்டுவிழி ஓடை மலர்முகத்தில்
ஓடிஎன் உளங்கவர்ந்து தின்னவும்
காடு சிலிர்க்கும்படி மேலாடு முன்தானை
காற்றோடு காற்றாகப் பின்னவும்
காதற் கரும்பொன்று காலிற் சிலம்பணிந்து
கடிதில் இடைதுவள ஆடியதோ என்னவும்
ஆடற்கலைக் கழகு தேடப் பிறந்தவள்
ஆடாத பொற்பாவை ஆட வந்தாள்!

"எளிய நண்டின் கட்சிறிய...களாக்கனி"

"குத்துண்ட கண்ணாடி கொண்டபல வீறல்கள்போல்
துத்திக்காய் போலச் சுடர்முகச் சுருக்கம்" [தேன்குழல்'

"மீன்வலை சேந்தும் கயிற்றை வேய்ந்த வளையம்போல்

"தாழையின் முள்போல் தகுசீ ரகச்சம்பா!'
"விழுந்துபடும் செங்கதிரை வேல்துளைத்த தைப்போல்
உளுந்து வடை"
"ஆனை அடிபோல் அதிரசம்"
"கொட்டித் தும்பைப்பூக் குவித்ததுபோல்...பிட்டு"
"எருமைமுது கென்புபோல் பண்ணிய
தங்கமணிக் கோவை"
"முல்லையரும்பாம் குருவியின் மூக்கு!
மல்லி பிளந்தது போன்றதன் கண்!"
"கூனன் புகுந்தாலும் குனிந்து புகுங் குடிசை"

இப்படியாய் உவமைநலம் எடுத்தெடுத்துச் சொல்வான்!
எல்லாமும் இயற்கையிலே விளைந்துவந்த ஆக்கம்!
தப்படியாய் அடித்துவிட்டுத் தம்மடிக்கே ஒப்பத்
தமுக்கடிக்கக் காசுகொடுத் தோரிருவர் வைக்கும்,
செப்படியாட் டப்புலவன் பாவேந்தன் அல்லன்!
சீர்த்தி, அறம், செழுமையொடும் இயற்கைபுனை மேலோன்!
மப்படிக்கே மயிலாடல் உண்மையதாம் என்றால்,
மனங்களிக்கப் பாவேந்தன் பாடியதும் உண்மை!' 26

ஒன்றுரைப்பேன் நீங்களதை உணர்ந்துகொளல் வேண்டும்!
உலகமெலாம் அலைந்தாலும் இப்புதுமை காணீர்!
துன்றிருளும் தூங்குகின்ற இடங்காட்டு வீரா?
தோதுபல ஆய்ந்தாலும் தோற்றுத்தான் போவீர்!
இன்றன்றும்; இனியன்றும்; எந்நாளும் இதுபோல்
எப்புலவ னும்காட்டான் இயற்கைசெயும் கூத்தை!
ஒன்றன்மேல் ஒன்றடுக்குந் தாமரைப்பூ விதழ்க்குள்
உறங்குகின்ற இருளை எவன் காட்டிவிட்டுப் போனான்? 27

பாடலினைக் கேளுங்கள்; "அடுக்கிதழ்த்தா மரைப்பூ
இதழ்தோறும் அடிப்புறத்தில் படுத்திருப்பாய் நீதான்"
ஓடவிழ்க்க வெளிப்படுமோர் ஒளிமுத்தம் போல
இயற்கையின துண்மையெலாம் கண்டுகண்டே உரைத்தான்!
தேடரிதாம் சொற்களெலாம் பாவேந்தன் உள்ளம்
தேடிவந்து குடிபுகுந்து தேவைவரும் போதில்
மூடரிதாம் வாயில்வழி தூவல்வழி யாக
முண்டுவரும் பாட்டாகப் பாரதிதா சற்கே! 28

—(தொடரும்)

தனிம வரிசை

இல. க. இரத்தினவேல், அறி. மு.
அறிஞர் அண்ணு அரசினர் கல்லூரி, செய்யாறு-604407.

8. கரி CARBON C^{12}_{6}

வைரம்—இயற்கையில் கிடைக்கும் வன்மை மிக்க பொருள். விலை மதிப்போ அளவில் அடங்காது. அரசர்களேயும், அரசிகளேயும்; திருமாட்டிகளேயும் வெறிகொள்ளச் செய்த அணிபொருள். நகைக் கடையில் வைரத்தின் விலையை உசாவியவாறு இரண்டு வைரக் கற்களே விழுங்கிக்கொண்டே நழுவி ஓடிய கல்லூரி மாணவியின் திறத் திருட்டை செய்தித் தாள்கள் செப்பின வன்றே! கோகினூர் வைரத்தைக் கேள்விப்படாதவர் தாம் எவர்? கொள்ளே விலை விற்கும் வைரம் எது தெரியுமா? வெறும் கரிதான். அஃதாவது படிகவுருவில் உள்ள வெறும் கரித்துண்டுதான்! 1704 இல் வயவர் ஐசக்கு நியூட்டன் தமது ஒளி நூலில் (Optiks) வைரம் எரியக் கூடியதே எனக் குறித்தார். 1772 இல் இலவாய்சியர் எரித்தே காட்டினர். 1797 இல் ஆங்கில இயைபியலார் சுமித்சன் டென்னண்ட் (Smithson Tennant) என்பார், வைரம் என்பது முழுக்க முழுக்கக் கரியே என நிறுவினர்.

தனியாகவும், கூடிகையாகவும் இயற்கை யன்னேயின் மடியில் எங்கும் பரந்து பட்டுக் கிடக்கும் இந்த அன்மத் தனிமம் (non-metallic element) தொன்முது பழங்காலத்து மாந்தனேக் கவரா விட்டாலும், அவனுல் அறியப் பட்டதே! எரிந்த எல்லாப் பொருள் களின் எச்சமும் கரியே.

கரி எரிவதில் தான் உயிர்வாழ்வும், எந்திர இயக்கமும் நடை பெறுகின்றன. ஊரும் உயிரிகள் நீக்கும் கரியை, பயிர்கள் ஒளிச் சேர்க்கையால் ஒன்று சேர்க்கின்றன. நகர் திணேயும் (mobile beings) நிலேத்திணேயும் (static beings) இவ்வாறு மாற்றி மாற்றிக் கரியச் சுற்றை (carbon cycle) நிறைவுறுத்துவதால் உயிர்வாழ்வு சீராக நடைபெறுகிறது.

வேதியலில் (chemistry) கூறப்பெறும் கரியக் கூடிகைகள் மட்டும் பத்து இலக்கத்துக்கு மேல்! மேலும் உண்டாக்கப்பெறும்

செயற்கைக் கரியக்கூடிகைகள் இவ்வெண்ணிக்கையை ஆண்டு தோறும் உயர்த்திக் கொண்டே வருகின்றன கரிம வேதியல் (Organic chemistry) என்று வேதியலில் பெரும் பிரிவே தோன்றி வளர்ந்து பல்கிப் பெருகி வருகிறது.

கரிப்பெயர் : கரி என்பது அதன் நிறத்தால் பெற்ற பண்புப் பெயர். கரி, இலத்தீனில் carbo என வழங்கப் பெறும்.

சக்கரம்—(கிரேக்கம்) Kuklos; (ஆங்கிலம்) cycle சிக்கன்—(இலத்தீன்) kiken (ஆங்கிலம்) chicken என்று சகரமும் ககரமும் ('ச'வும் 'க'வும்) தமக்குள் மாறுவதற்கு ஒப்ப, ஆங்கிலத்தில் கரி(தல்) —char; char (coal) என்று வழங்கப்பெறும். அஃதாவது கரி—> L. carbo = E. char (coal) இதுவே கரியின் பெயர் வரலாறு. இதற்கான குறியீடு C

எப்பொருளின் இறுதி நிலையான வடிவமும் கரியே!

௯. சுற்பொறை Sulphur S^{32}_{16}

சுடுவதையும், அதன்வழி எரிவதையும் குறிக்கும் சொல்லின் வேர் சுல், சுள். 'சுள் என்று எரிக்கும் சுடரோன்' ஆன சூரியன் என்பது சொல்லின் வரலாறு.

சுல் – சுர் – சூர் – சூரியன்

சுடுதன்மையும் எரிதன்மையும் தாங்கிய பொருட்கள் சுற்பொறை எனப்பட்டன. பொறு–பொறை * பொறுத்தல்–சுமத்தல், தாங்குதல் ஏந்துதல்.

எரியக்கூடிய எல்லாப்பொருட்களையும், முதுமக்கள் சுற்பொறை (sulphur) என்ற குறிப்பிட்டு வந்ததால் நாம் கருதும் தனிமச் சுற்பொறை (sulphur) யைப் பழம் இலக்கியங்களில் பகுத்துணர்தல்

---

* பொறுத்தல் என்றால் சுமத்தல், தாங்குதல், ஏந்துதல், 'அறத்தாறு இதுவென வேண்டா' என்ற திருக்குறளில் சிவிகை தாங்குபவன் "சிவிகை பொறுத்தான்" எனக் குறிப்பிடப் பட்டுள்ளான் பொறு என்பது ஆங்கில சாக்சானியத்தில் beran என்றும், ஆங்கிலத்தில் bear என்றும், இலத்தீனில் fero என்றும் கிரேக்கத்தில் phereen என்றும், இவ்வாறே இன்னும் பல மொழிகளிலும் வழங்கப் பெறும்.

மிகக் கடினம். எரியும் எல்லாப் பொருள்களிலும் இருப்பதாகக் கருதிய புளோசிசுடான் (phlogiston) என்னும் வெப்பக்கூற்றுக் கற்பனைத் தனிமம் இந்தச் சுற்பொறையே என்றும் கருதினர். [''ஒரு பொருளில் புளோசிசுடான் இருக்கும் வரை அஃது எரியும். எரிய எரிய அதிலுள்ள புளோசிசுடான் வெளியேறும்'' என்பது அக்காலக் கொள்கை.] சுற்பொறையை நாம் இப்போது கந்தகம் என வழங்குகிறோம்.

பழமை : கூடிகையாக அல்லாமல் தனியாகவே சுற்பொறை எங்கும் கிடைப்பதால் மிகப் பழங்காலத்திலேயே இதன் பயனை மக்கள் அறிந்திருந்தனர் தூய்மையைப் பேணச்சுராலை(சாம்பிராணி)ப் புகையூட்டும் வழக்கம் பழங்காலந் தொட்டே இருந்து வந்திருக்கிறது.

மருத்துவத்திற்கும், துணி வெளுப்பதற்கும், தீக்கோல்களுக்கும் திரிகளுக்கும் சுற்பொறைக்கட்டி பயன்படுவதை பிளினி (கி.பி 79இல்) விளக்கிக்கூறியுள்ளார். வெடி மருந்தில் சுற்பொறையின் முகாமைப் பங்கை முன்னுளிலேயே அறிந்திருந்தனர்.

மெஃசிகோ (Mexico) வில் உள்ள பாப்போகட்டிப்பீட்டல் (Popocatepetl) மலையில் உருமலுடன் புகைவரும் ஓர் எரிமலையின் வாய் வழியாகக் கயிற்றை இறக்கி, அதன் உதவியால் 120 (மீட்டர்) மாத்திரி ஆழம் வரை இறங்கி பெரும் ஏதத்திற்கு இடையே தமது முதல் வெடி மருந்துக்கு வேண்டிய சுற்பொறையைப் பெற்றதைப் பற்றிய குறிப்பொன்று கோர்சு (cortes) என்பார் ஐந்தாம் சார்சு அரசருக்கு 1524 அக்டோபர் 15–இல் எழுதிய அஞ்சலில் உள்ளது.

சுற்பொறையை எடுத்தல், தூய்மைப்படுத்தல் அதன் பயன் ஆகியன பற்றி இத்தாலி நாட்டுப் பாவலர் மாசினி 1759இல் இசைத்த நெடும்பாவில் சில வரிகள்:

பாறையின் உள்ளும் புதர்இடை யேமலைச்
சாரலின் நாப்பண் சுற்பொறை வேர்கொளும்
அம்பொன்போல் வெள்ளிபோல் செம்புபோல் இரும்புபோல்
இந்தச் சுற்பொறை போலவே பயிர்களும்

பயிர்களைப் போலவே எல்லாம் உருவாகின்றன என்பது அக்காலக் கருத்து. இது நிற்க.

புளோசிசுடான் கொள்கைக்குச் சாவுமணியடித்த இலவாய்சியர், 1777இல் சுற்பொறை ஒரு தனிமம் என்று கருத்துரைத்தார். எனினும் வயவர் அம்பிரி தேவி (Sir Humphrey Davy) தமது

ஆராய்ச்சியில் 1808, 1809-ஏன்...1810 ஆம் ஆண்டு வரை சுற்பொறை ஒரு கூடிகை என்றே கூறிவந்தார். அதற்கு அவருக்குக் கிடைத்த சுற்பொறை தூய்மைக்குறைவாய் இருந்ததே காரணம்.

சுற்பொறையின் இருப்பு: நில ஓட்டில் 10000இல் ஒரு பங்கு சுற்பொறைச்கூடிகைகளே (sulphur compounds). எரிமலைக் குழம்பின் பெரும்பாகம் சுற்பொறையே.

சுற்பொறையின் பிரிப்பு: சுற்பொறைக் கனியங்களைக் காளவாயில் இட்டு எரித்து, குழம்பாக்கி, வடித்து, வார்த்து சுற்பொறைக்கட்டிகள் ஆக்குவர். நிலத்துள் 60 மாத்திரி முதல் 600 மாத்திரி வரை ஆழத்தில் உள்ள சுற்பொறையை வெளிக்கொணரும் முறை: ஒரு நடு மூக்குழாய்களை நிலத்துள் இறக்கி, ஒரு குழாய் வழியாகச் சுடுநீரைப் பாய்ச்சி சுற்பொறை உருக்கப்படுகிறது. நீரின் அடியில் தேங்கும் உருகிய சுற்பொறைக் குழம்பு மற்றொரு குழாய் வழியாக மேலே தள்ளப்படுகிறது.

பயன்: சுற்பொறைக்கூடிகைகள் நோய்ம உயிர்க்கொல்லிகளாகவும், உரமாகவும் பயன்பெறுகின்றன. சல்பாடயசீன், சல்பானமைட், சல்பா குணடைன் முதலிய சுற்பொறைக் கூடிகை மருந்துகளைக் கேள்விப்படாதவர் தாம் எவர்?

மணம், சுவை அற்ற வெளிர்மஞ்சள் நிற அன்மத் தனிமமே (non metallic element) சுற்பொறை. தங்கம், பிளாட்டினம் என்னும் இரண்டு மாழைகளைத் தவிர்த்து மற்ற எல்லா மாழைகளுடனும் இணைய வல்லது.

தொன்மை மிக்க தனிமங்களை இதுவரை கண்டோம். இனி இடைக்காலத்தில் கண்டறியப்பெற்ற தனிமங்களைக் கருதலாம்.

“தென்மொழி” சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	12 உருபா	24 உருபா	24 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ்:	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் கேட்க!

மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ்.

புலவர். இறைக்குருவனார்

தாலப் பருவம்

21

மழலைச் செந்தமிழ் மூதாட்டி[1]
[2]மலர்வாய் இன்மொழி[3] மெய்யேயாய்
மன்னி விளங்கும் வாய்மை நலம்
மாநிலம் உணரக் காட்டுவைபோல்
சுழலைத் தாங்கிக் கரைபொருது
துளும்பிப் பாலை[4] நிலமறையச்
சொரியும் வெள்ளப் பாலாறு
சூழுந் தொண்டை வளநாட்டுள்
[5]புழலைப் புரையும் பேரேரி
பொலியும் பல்லவ புரத்தின்கண்
பொதுமைக் [6]கழகச் சான்றோனாய்ப்
புதுமை யரசு வீற்றனையால்
தழலைப் புரையுந் திருமேனி
தாலே தாலோ தாலேலோ
தன்னே ரில்லாத் தமிழாளி[7]
தாலே தாலோ தாலேலோ!

22

வண்டமிழ் ஆளும் நிலவறையில்
வந்து புகுந்தோர் சிறுதெய்வ
வணக்கமும் அவர்தாஞ் சிற்றுயிரை
வதைக்கும் வேள்வி வெறியாட்டும்

21—1. மூதாட்டி—ஔவையார்; 2. மலர்வாய்—வாய்மலர்—வாயினால்—மலர்ந்த மலர்—வினைச்சொல்; 3. 'தெண்ணீர் வயிற் றொண்டை நன்னாடு சான்றோருடைத்து"; 4. "பாலினால் (நீரினை) நிலம் மறையும்படி சூழும் எனவும், பாலை நிலம் (இல்லையென்னுமாறு மறையும்படி) எனவும் கொள்க; 5. புழலேரியைப் போலும் பேரேரி. பல்லவபுரத்தில் உள்ளது; 6. கழகச்சான்றோன்—சங்கச் சான்றோர் என்பது மேலோர் வழக்கு; 7. தமிழாளி—தமிழை ஆளுநன். "அந்தமிழாளி"—சேக்கிழார்.

மண்டிய போலிப் பழங்கதையும்
மற்றுச் செந்தமிழ் முன்னோர் தம்
மாண்புயர் முழுமுதல் வழிபாடும்
மயங்கலின மங்கிய தமிழர் நிலை
கண்டு வருந்திப் பேரறிவால்
கலைவளம் மிக்க [1]தமிழர் மதம்,
[2]காட்டி விளக்கி இனிதொழுகிக்
கடையேம் உய்ய அருள் செய்தோய்!
தண்டலை சூழும் தமிழ்நாட
தாலே தாலோ தாலேலோ!
தன்னே ரில்லாத் தமிழாளி
தாலே தாலோ தாலேலோ!

23

புகழும் புலவர் பெருங்குழுவும்
போற்று ராய [1]மறுதலையும்
பொருவரும் ஆவல் மீதூர்ந்து
பொங்கப் பெரிதங் காத்திருப்ப
இகலோன் றில்லாப் [2]பெருமலையின்
இயக்கத் துற்ற நறும்பயனாய்
இறவாப் புகழில் நிலைப்பிக்கும்
இயல்பின தாய்நற் புதுமையதாய்
அகன்றாழ் [3]அறிவுக் கடல்வந்த
அரும்பொரு ளாய தமிழமுதம்
அடையும் பேறு யாம்பெற்றேம்
அண்ணல் நின்றன் பேரருளால்
தகவினின் உயரிய தமிழ்ப்பெருமை
தாலே தாலோ தாலேலோ!
தன்னே ரில்லாத் தமிழாளி
தாலே தாலோ தாலேலோ!

22—1. தமிழர்மதம்—அடிகளாளின் நூல்
தமிழர்மத மாநாட்டின் தலைமைப்பொழிவின் விரிவு.
2. தமிழர் மதம் இதுவெனச் சுட்டிக்காட்டி விளக்கியது மட்டு மன்றித் தாம் அந்நெறியில் ஒழுகிக் காட்டியமையும் குறித்தவாறு.
23—1. மாறுதலை—அடிகளாரின் கொள்கைகட்குப் புறம்பாயினர்.
2. பெருமலை—அடிகளார்.
3. அறிவுக்கடல்—அடிகளாரின் திங்கள் இதழ்.
இப்பாடற்கண் பிறிதொரு பொருள் அமைந்துள்ளமை காண்க.

24

வேறு படும்பல நிலையினரும்
விளங்கு பரம்பொருள் வழிபாட்டை
விரும்பிய முறையே மேற்கொள்ள
விரிவாய் அமைந்து பற்பலவாங்
கூறு படும்படி நிலைகொண்ட
கொண்முடி பாய சிவநெறியைக்
குலவிய சிறுமை அகல்வித்துக்
கொள்கை வழியே தனிநின்று
மாறு படும்படி இல்லாது
மன்னுயிர் எல்லாம் இன்பமுற
மன்னும் [1] பொதுநிலைக் கழகமென
மாபெரு நிறுவனங் கண்டுதிருச்
[2] சாறு கொளும் பெரு வீறுடையாய்
தாலே தாலோ தாலேலோ!
தன்னே ரில்லாத் தமிழாளி
தாலே தாலோ தாலேலோ!

25

பாவலன் அரிய உரைவல்லான்
பரவுறும் உரைநடை தனிவல்லான்
பாடம் பயிற்றும் பேராசான்
பண்ணியல் நாடக முறைதெரிவோன்
நாவலன் உடனூல் மருத்துவனும்
நலமார் அறிதுயில் வல்லுநனும்
நமதாஞ் சிவநெறி ஆசிரியன்
நாடுறும் அச்சுக் கலையறிவன்
காவலன் எனநின் றின்றமிழைக்
காக்கும் ஏரணப் போர்மறவன்
கருதுறு மொழிநூல் ஆய்வாளன்
கைவரு [1] தாளிகை யாளனெனத்

24—1. பொதுநிலைக்கழகம் (சமரச சன்மார்க்க நிலையம்) அடிகளாரின் நிறுவனம்.

2. சாறு—விழா. ஷ கழகத்தின் இருபதாம் ஆண்டு விழா (நிறைவு விழா) சிறப்புறக் கொண்டாடப் பெற்றது.

சமண இராமாயணத்தில் இராவணன்

பன்மொழிப்புலவர். இரா. மதிவாணன், க. மு; இலக். இ.

தென்திசையைப் பார்க்குங்கால் புரட்சிப் பாவலர் பாரதி தாசனுர்க்குத் தோள்களெலாம் பூரித்தன. குன்றெடுக்கும் தோளனும் கொடை கொடுக்கும் கையனுமான தமிழர் முன்னேன் இராவணன். கோவேந்தனுகக் கொற்றஞ் செலுத்திய தென்னிலங்கை பாவலரின் மனக்கண்ணைக் கவர்ந்தது. இன்று வழக்கிலுள்ள இராமாயணக் கதைகள் இராமன் புகழையே பெரிதாகப் பேசுகின்றன. இராவணனின் உண்மை வரலாற்றை எடுத்தியம்புவதில்லை.

இக்கதை இந்து சமயத்தார்க்கு மட்டுமின்றிச் சமண, பவுத்த சமயத்தார்க்கும பொதுவாக இருப்பது. இக்கதையின் தொன்மையை யும் நெடுங்காலமாகச் செவிவழிச் செய்தியாக வந்ததனுல் ஏற்பட்ட கதை வேறுபாடுகளையும் தெளிவாகக் காட்டுகிறது. பல்வேறு இராமாயணக் கதைகளுள் உண்மைக்கதை எது என்று அறிய பலரும் முயல்கின்றனர். வால்மீகி, இராமனை மாந்தவியல்பினனுகப் படைத்திருந்தும் கம்பர் இராமனைத் தெய்வத்தின் தோற்றரவாகக் காட்டிவிட்டார். கம்பனைப் பின்பற்றித் துளசியும் இராமாயணத் தைத் தெய்வப் பாவியமாக்கியிருத்தலைக் காண்கிறோம். இதன் விளைவாக இராவணனை மேலும் கொடிய அரக்கனுகப் பொதுமக்கள் முன்னிலையில் படம்பிடித்துக் காட்டுவதற்கும் வடநாட்டில் இராவண னைக்'கொடுங்கரிசன்' கட்டி எரிப்பதற்கும் வழிவகுக்கப்பட்டுவிட்டது. பாவியக்கதை ஏந்தலாக(Hero)க் கருதும் மாந்தருள் ஒருவனை வேண்டுமென்றே மிகவுயர்த்திக் காட்டத் துணிந்தபோது, முரண் மாந்தனை (Villain) மிகவும் தாழ்த்த வேண்டிய கட்டாயம் அவர் களுக்கு ஏற்பட்டு விட்டது. தருமன் சூதாடினுலும் பாவியத்தலைமை பெறமுடிகிறது. இராவணன், மகாபலிபோன்ருேர் நல்லவராயினும் மிகக் கொடியவராக்கப்படுகின்றனர்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

[2]தாவறு மெய்ப்புகழ் மேவுபெருந்
தலைவா தாலோ தாலேலோ!
தன்னே ரில்லாத் தமிழாளி
தாலே தாலோ தாலேலோ!

25—1. தாளிகை—இதழ் (பத்திரிகை)
2. தாவறு—குறைவற்ற.

இந்நிலையில், சமணர்களின் இராமாயணமாகிய 'விமலசூரி இராமாயணம்' இராவணனின் உயர் பண்புகளையும் பெருமைகளையும் மிகுத்துக் கூறுவது, இராமாயணக் கதையின் பழைய வரலாறுகளை அறிய விரும்புவார்க்கு விருந்தாக அமைகிறது.

'விமலசூரி' என்னும் சமண முனிவரால் கி.மு. முதல் நூற்றாண்டளவில் இயற்றப்பெற்ற இராமாயணம் 'பவுமசரிய' (பதுமசரிதம்) எனப்படுகிறது. இது பிராகிருத மொழியில் எழுதப்பெற்றுள்ளது. இராமனைப் பவுமன் (பதுமன்) என்றழைப்பது பிராகிருத நூலாரின் வழக்கம். பதுமன் என்றால் அழகன் என்று பொருள். இராமன் என்னுஞ் சொல்லுக்கும் அழகன் என்பதே பொருள்.

விமலசூரி 'பவுமசரிய' எனும் இந்த இராமாயணத்தை ஏன் எழுத நேர்ந்தது என்பதற்குக் கீழ்க்கண்ட கரணியங்களைக் காட்டுகின்றார்.

1. வால்மீகியின் இராமாயணம் பொருந்தாக் கூற்றுகளையும் உண்மைக்கு மாறான வரலாறுகளையும் கொண்டிருக்கிறது.
2. இராவணனும் அவன் மரபினரும் புலால் உண்பவர்களாகக் காட்டப்பெற்றிருப்பது தவறு.
3. கும்பகருணன் ஆறு திங்கள் உறங்குபவன் என்பதும் யானை, எருமை முதலியவற்றை உண்டு ஏப்பம் விடுபவன் என்பதும் இயற்கைக்கு மாறானவை.
4. இராவணன் தேவர் தலைவனாகிய இந்திரனை வென்று ஏவல் செய்வித்தான் என்பது உண்மையன்று.

மேலும், தாம் எழுதும் 'பவுமசரிய' தாமே படைத்த கதை அன்றென்றும், 'இராசகிருக மன்னன் சிரேணிகன்' கேட்கக் 'கவுதம கணதரா' என்னும் சமண முனிவா கூறிய மிகப்பழைய வரலாறு என்றும் கூறுகிறார். மூடப்பாவலர்கள் சிவநெறியினனாகிய இராவணனைப் புலால் உண்பவனாகவும் அரக்கனாகவும் படைத்துக் காட்டிவிட்டார்களே என்று வருந்துகிறார்.

இந்நூலில் பெரும்பாவிய அமைப்புக்கு ஏற்ப, நாட்டு நகர இயற்கை வண்ணனைகளும் கிளைக்கதைகளும் நிறைந்துள்ளன. மக்களின் பேச்சு வழக்குச் சொற்களும் மிகுந்துள்ளன.

இந்நூலின் முதலிருபது படலங்கள் வரை இராவணனின் முன்னோர் மரபுத்தோற்றமும் இராவணன் வரலாறும், கூறப்பெறு

கின்றன. 21-ஆம் ஆம் படலம் முதல் தயரதன் வரலாறும், பதுமன் (இராமன்) வரலாறும், இலங்கைப் போரும், சீதையின் சிறை மீட்பும், மீண்டும் சீதையைக் காட்டுக்கு அனுப்புதலும், இலவகுசர்களின் பிறப்பும் பிறவும் கூறப்பெறுகின்றன.

இராமாயணக்கதையைத் தயரதன், இராமன் வரலாறுகளிலிருந்து தொடங்காமல், எடுத்த எடுப்பிலேயே இராவணன் குடி வரலாற்றிலிருந்து தொடங்கி இராமன் வரலாற்றில் முடிப்பது இராமாயணக் கதைப்போக்கிலேயே புதுமையானதாக இருக்கிறது.

இராவணனின் குடி வரலாறு கூறப்பெறும் முதற்பகுதியில், 'கிரேத' ஊழியில் அரச வணிகவேளாளர் எனும் மூவகுப்பினர் மட்டும் இருந்ததாகவும், பிராமண வகுப்பார் இல்லை என்றும் கூறப்பெறுகிறது அடுத்த ஊழியில் 'இடப'தேவர் மன்னன் மாவலிக்கு (மகாபலி) அருளறம் உரைத்தார். அதற்கடுத்து 'இட்சுவாகு,' 'சோடன் 'வித்தியாதரன்,' அரி ஆகியோரின் நான்கு மரபுகள் தோன்றின. வித்தியாதரர்க்கு 'வானரர்' என்று மற்றொரு பெயர் இருந்தது. அவர்கள் தம் கொடியில் குரங்கு இலச்சினையைப் பொறித்திருந்ததால் இப்பெயர் பெற்றனர். ஆதலால், இராமாயணக் கதையில் சுட்டப்படும் வானரர் வித்தியாதரர் எனும் மாந்தரேயன்றி குரங்குகளல்லர்.

இராவணன் பிறப்பும் அவன் வீம அடவியில் (பீமாரண்யம்) கற்ற கல்வியும் கலைகளும் விரிவாகக் கூறப்பெறுகின்றன. இராவணனின் தாய், அவனுக்கு ஒன்பது விலையுயர்ந்த கல்பதித்த மணி மாலையை மார்பிலணிவித்திருந்தாள். அவ்வொன்பது ஒளியுமிழும் கற்களிலும் இராவணனின் முகம் தெரிந்தது. மாணிக்கக் கற்களில் தெரிந்த ஒன்பது முகங்களை உண்மை முகத்தோடு சேர்த்து எண்ணித் தன் பிள்ளைக்குப்பதின்முகன் (தசமுகன்) எனப்பெயரிட்டாள். இதனை அறியாத பிற்காலக் கதையாசிரியர் அனைவரும் இராவணன் பத்துத் தலைகளையுடையவன் என்று தவறாகக் கதை கட்டி விட்டனர்.

எட்டாம் படலத்தில் இராவணன் 'மண்டோதரி'யை மணப்பதும், 'கும்புகருண வீடணரின்' திருமணம், 'மேகநாதன்' பிறப்பு ஆகியவையும் கூறப்பெறுகின்றன. ஒன்பதாம் படலத்தில், 'வாலி சுக்கிரீவர்'களின் வரலாறு, 'கரதூடனர்' 'சந்திரனகா' (சூர்ப்ப நகை)வை' மணத்தல், வாலி இராவணன்போர் ஆகியவை கூறப்பெறுகின்றன. பத்தாம் படலத்தில், இராவணன் பலதிசைகளிலும் வெற்றிச் செலவு மேற்கொள்வதும், பதினோராம் படலத்தில் 'சினேந்திரனி'ன்

சீடனுகிப் பல அருகக் கோட்டங்களைக் கட்டுவதும் கூறப்படுகிறது. பன்னிரண்டாம் படலத்தில் இராவணனின் மகளான 'மனோரமா'வின் திருமணம் வண்ணிக்கப்படுகிறது. 'அக்சனுசுந்தரி'யின் திருமணம், 'அநுமன்' வரலாறு ஆகியவற்றோடு மூதற்பகுதியான இராவணன் குடிவரவு வரலாற்றுப் பகுதி முடிவடைகிறது.

இருபத்தொன்றும் படலம் முதல் 'தயரதன்.' 'இராமன்' வரலாறு தொடங்குகிறது. தயரதனின் மூதன் மனைவியின் பெயர் 'அபராசிதா,' காட்டுக்கு இராமனுடன் சென்ற 'இலக்குவன்' தண்டக அடவியில் 'கர தூடனரி'ன் மகனுன 'சம்புகனை'க் கொன்றுவிடுகிருன். மகனை இழந்த 'சந்திரனகா' (சூர்ப்பநகை) ஆற்ருத்துயரால் அலமரு கிருள். இச்செய்தியை அறிந்த இராவணன் சினமுற்றுச் சீதையைக் கவர்ந்து மலர் வானூர்தியிலிருத்தி இலங்கைக்குக் கொணர்கிருன். இராவணனுக்கு 18000 மனைவியர் இருக்க அவர்களால் கிட்டாத மகிழ்ச்சி சீதையால் கிட்டப்போகிறதா என்று மண்டோதரி இராவணனை வினவுகிருள்.

இராமனுக்கும் இராவணனுக்கும் இலங்கையில் நிகழ்ந்த போரில், இராவணன், இலக்குவனனுல் கொல்லப்படுகிருன். சீதையை மீட்டுச் சென்ற இராமன் ஊரார்பழிப்பதுகண்டு மீண்டும் அவளைக் காட்டுக்கு அனுப்பிவிடுகிருன். 'இலவகுசர்கள்' பிறந்தபின், சீதை இராமன் முன்னிலையில் தீப்பாய்ந்து தன் கற்பை நிலைநிறுத்திக் காட்டு கிருள். சீதை தீப்பாய்ந்த நெருப்புக்குண்டம் குளிர்ந்த நீர்ப் பொய்கையாக மாறிவிட்டதைக்கண்ட இராமன் சீதையிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிருன். இருப்பினும் சீதை இராமனை வெறுத்துத் தலையை மழித்துக்கொண்டு சமணத்துறவியாகிருள். இலவகுசர்கள் துறவறம் மேற்கொள்கின்றனர். இலக்குவன் தான் செய்த தீவினை களுக்காக இறந்தபின் நிரயத்துக்குக் (நரகம்) கொண்டு செல்லப் படுகிருன்.

அனைத்தையும் வெறுத்த இராமன் இறுதியில் தவம் மேற் கொண்டு 'நிருவாண' நிலையை எய்துகிருன். இராமனுயினும் இராவ ணனுயினும், அவரவர்குறை நிறைகளை உள்ளவாறே 'விமலசூரி' உரைத்திருக்கிருர். இராவணனும் இராமனும் சமண நெறியைச் சார்வதாகச் சொல்லியிருப்பது சமயம் பரப்பும் நோக்கத்தினதாயிருப் பினும் கதைப்போக்கில் ஏற்றத்தாழ்வில்லை.

இக்கதைப்போக்கை உன்னிப்பாகக் காணின், இராமாயணப் போர் இராமனுக்கும் இராவணனுக்கும் மூண்ட நேரடிப்போர் அன்று.

என்பதும், வித்தியாதர்க்கும் (வானரர்) இராவணனுக்கும் இருந்த பகைமைக்குத் தூண்டுகோலாகச் சீதையைக் கவர்ந்த நிகழ்ச்சி நடை பெற்றதால், இராவணன் தன் இளையமரபினரோடு மோதித்தோற்ற தோல்வியில் இராமன் வெற்றிக் கொடியுயர்த்திக் கொண்டமையும் புலனாகிறது.

இராவணன்பால் பிறன்மனை விழைதல் என்னும் ஒரு குற்றம் தவிர வேறு குறைபாடுகள் ஒன்றானும் கூறப்படவில்லை. சந்திரனகா (சூர்ப்பநகை)வின் மகன் சம்புகனை இலக்குவன் கொன்றது ஒன்றே சீதையைச் சிறைவைத்ததற்கும், இராமாயணப்போர் ஏற்பட்டதற்கும் கரணியமாகக் கூறப்படுகிறது. சீதை சிறைவைக்கப்பட்டபின்; சிறை மீட்புக்குப்பின் தன் கற்புக்குத் தீங்கு நேராமையைத் தீக் குளித்து நிறுவினாள் என்னும் கதையை உறுதியாக நம்புகின்ற அனைவரும், இராவணன் மாற்றான் மனைவியைக் கெடுக்கவில்லை; பெருமிதமாக நடத்திய பண்பாளன் என்று பேசுவதற்கு ஏன் கூசுகி றார்கள் என்று தெரியவில்லை! இதன்படி இராவணன் மாற்றான் மனைவியை விரும்பினான் என்று சொல்வதே தவறாகிறது. காமநெறி யினன்போல்இராவணன் கயமைத்தனம் செய்யவே இல்லை.' துரியோ தனனைப் போலவும் நடந்துகொள்ளவில்லை. பகைவரின் ஆநிரையைக் கவர்ந்து பகைவரைப் போருக்கு அழைப்பது போல், தனித்தவனான இராமனை அவன் மனைவியைக் கவர்ந்து சிறைவைப்பதன் மூலம் போருக்கு அழைத்தான் என்று கூறுவதே பொருத்தமாகத் தெரிகிறது.

ஆரியரின் வருகைக்கு முன்பே சிவனியம் இந்தியப் பெருநிலம் முழுதும் செழித்திருந்தது என்பது வரலாற்றாசிரியரும் அகழ் வாராய்ச்சியாளரும் கூறிவரும் உண்மையாகும். இராவணன் சிவனை வணங்குபவன், இசைவாணன் என்று இந்து சமய இராமாயணங்கள் கூறுகின்றன. சிந்துவெளி நாகரிக மக்களும் சிவனை வணங்கினர், சமணரின் அருகதேவனும் சிவன் எனப்படுவதை நோக்கும்போது மிகப்பழங்காலத்திலேயே கொல்லாமையையும், புலால் உண்ணாமை யையும், தலைமையறமாகக் கொண்ட மக்கள் தென்னாட்டிலும் தென்னிலங்கையிலும் வாழ்ந்திருந்தனர் என்று தெரிகிறது.

இராமாயணக் கதையின்படி, இராவணன் யார் பேச்சும் கேளாதவன்; இராமன் பிறர் பேச்சுக்கு அஞ்சி மனைவியைக்காட்டுக்கு அனுப்பியவன்; இராவணன் மாற்றான் மனைவியை விரும்பியவன்; இராமன் தன் மனைவியையே விரும்பாமல் காட்டுக்கு அனுப்பியவன்.

இருவரும் தத்தம் மனைவியராலேயே விரும்பப்படாதவர்கள். இந் நிலையில் இப்பாவியத்தில் யாருக்கு முதன்மையளிப்பது என்னும் சிக்கல் விமலசூரிக்குத் தோன்றியதன் விளைவாக, இராவணனுக்கு முதலிடமும் இராமனுக்கு அடுத்த இடமும் தந்து, இறுதியில் இராமன் சமண சமயம் சார்வதால் பாவியத் தலைமையை இராமனுக்கே தந்திருக்கிறார் என்று தெரிகிறது.

விமலசூரியின் இராமாயணம் தமிழாக்கப் பெறின் இராமாயணப் பாவிய ஆய்வாளர்க்குப் பெரிதும் பயன்படும்.

பிற மாநிலங்களில் இந்தி எதிர்ப்புணர்வு

நடுவணரசு இந்தி பேசாத மாநிலங்களிலுள்ள அரசுத்துறை தனியார் துறைகளிடை இந்தியிலேயே கடிதப் போக்குவரத்து நடத்துவது கண்டிக்கத்தக்கது என்று கருநாடக மாநிலக்கன்னட சளுவணிகர் இயக்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. கன்னட நாளேடுகளும் ஆசிரியவுரையில் இக்கருத்தை எதிரொலித்துள்ளன.

கேரளத்து ஈ. எம். எசு நம்பூதிரிபாது, (Marxist leader) 9-8-77 அன்று மூவர் குழுவாகச் சென்று, புதுதில்லியில் முதன்மை யமைச்சர் திரு. மொராசி தேசாயைக் கண்டு, நடுவணரசின் பொறுப் பிலுள்ள கணக்காய்வுத் தலைவர் அலுவலகத்திலிருந்து (Accountant general's office) இந்தி பேசாத மாநிலங்களுக்கு இந்தியில் கடிதம் வருவது விரும்பத்தக்கதன்று என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். இநதிப்பற்று இந்தி வெறியாகக்கூடாது என வற்புறுத்திக் கூறி யுள்ளார். (செய்தி: Indian Express 12-8-77)

பீகார் மாநிலத் தலைநகரான பாட்னுவிலிருந்து மேற்குவங்க மாநில அரசுக்கு இந்தியில் கடிதம் அனுப்பப்பட்டது. மேற்குவங்க அரசிடமிருந்து பாட்னுவுக்கு வங்க மொழியில் மறுமொழி அனுப்பப் பெற்றது.

ஆந்திர மாநில பேராயக்கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளு மன்றத்தில் தெலுங்கில் உரையாற்றினார். ஆங்கிலம் பேசத்தெரிந்திருந்தாலும், ஆங்கிலம் தெரிந்தும் வேண்டு மென்றே இந்தியில் பேசும் ஆளுங்கட்சியினர்க்குப் பாடம் புகட்டவே இவ்வாறு பேசினார் என்று கருதப்பெறுகிறது

நடுவணரசு அமைச்சர் இராசநாராயணன் நாடாளுமன்றத்தில் கேட்கப்பெற்ற ஆங்கில வினுவுக்குத்தமிழில் மறுமொழி தந்தபோது, எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர், தமிழில் விடையளிப்பதன் மூலம் இந்தி எதிர்ப்புணர்வை திசைமாற்றி விட்டதாகக் கருதவேண்டாம். என எச்சரித்துள்ளார்.

உலகியல் நூறு.

—பெருஞ்சித்திரனர்—

[மொழிபெயர்ப்பு : த. முத்துக்குமரன், க. இ.]

16. இறப்பியல்.

1. நிலையாமை நிலை

புறத்துப் புதுமை அகப்பழமை போற்றல்
துறத்தல் உயிரியல்பு தோன்றல்—பிறத்தலென்ப
ஒன்றெய்த வொன்றழியும் உண்மை நிலையாமை
என்றுமுள தோற்றம் இறப்பு!

பொழிப்பு : புறத்தே புதுமை என்று சொல்லப் பெறுவன எல்லாம் அகத்தே பழைமையுடையனவாகவே இருக்கும். தாம் புதிதாகக் கண்டுகொண்ட ஒன்றைப் போற்றுவதும், பின்பு அதனைத் தவிர்ப்பதும், உயிர்களின் அறிவு வளர்ச்சிக்குற்ற இயல்பான தன்மையாகும். மறைந்திருக்கும் ஒன்று வெளிப்படத் தோன்றுவதே பிறப்பு என்று சொல்லப் பெறுகின்றது. ஒரு பொருள் புதிய ஒரு தோற்றம் பெறுகையில் பழைய தோற்றம் அழிகின்றது. எனவே எந்த ஒரு தோற்றத்திலேயும் நிலைத்து நில்லாத—தன்மை (அல்) நிலையாமை—என்பது பொருள்களின் உண்மைத் தன்மையாகும். வெளிப்படும் அனைத்துத் தோற்றங்களும் அவற்றின் மறைவுகளும் என்றும் உள்ளவையே! (76)

16. ON DEATH

1. ON INEVITABILITY

Outwardly new is inward old;
Keeping, leaving life nature's hold
One to come, one to go a fact;
One is born to die as pact. (76)

What are said to be new externally are what are old internally. To keep what one finds new now is later on thrown off. This is what is natural to evolution. Outward appearance of what was hidden is what is called birth When a thing takes a new shape, it loses its old shape. So

what is unfixed in any stage is unstable and that is the real state of worldly things What appears will disappear: this is an eternal truth.

2. பொருணிலை

ஆற்றலொடு மூலம் அளவின் அறக்கலந்து
மாற்றுருவங் கொள்ளல் பொருளென்ப—காற்றுருவாய்
நிற்கும் கனக்கும் நிலத்தும் விசும்பிடத்தும்
ஒற்கமுற் றோயும் ஒளிர்ந்து.

பொழிப்பு: ஆற்றல் மூலப்பொருளுடன் பல்வேறு வகையான அளவில் இரண்டறக் கலந்து, வேறுவேறு வடிவங்கள் எய்தப் பெறுவதே பொருள்கள் என்று கூறப்பெறுகின்றன. கட்புலனுக்குப் புலபபடா வண்ணம் காற்றுப்போல் உருவமற்ற நிலையில் நிற்கின்ற அவ்வாற்றலும் மூலமுமாகிய பொருள்களே, கண்ணுக்குப் புலப்படும் கனத்த உருவங்களாக நிலத்தின் கண்ணும், விசும்பிடையிலும், விளங்கித் தோன்றியிருந்து பின்னர் மீண்டும் உருவமற்று எங்கேனும் ஓரிடத்தில் அமைதியாக ஒய்ந்திருக்கும் நிலையை எய்துகின்றன. (77)

2. ON OBJECTS

Source different size when subject
Combine with force to form object.
Unseen like wind in land and sky
Take shape to shine, later to die. (77)

Combining indistinguishably in various measures with force, the primordial source takes different shapes to form objects of different sizes. The origin and the power that are invisible like the wind turn out to form objects of different shapes as seen on land and the sky. They shine as such for a time and disappear to quickly take some other place somewhere.

3. ஆற்றல் நிலை

அற்றாலும் ஆற்றல் அழியாது மற்றொன்றாய்
உற்றாலும் ஆங்கதுவாய் உள்ளுயிர்க்கும்—வற்றாத
ஊற்றாய் உலகமாய் ஒண்கதிராய் நீள்விசும்பாய்
ஆற்றல் நிகழ்த்தும் அலைவு!

பொழிப்பு : பொருள்களில் பொருந்தியிருந்து இயங்கிய நிலையைத் துறந்தாலும ஆற்றல் என்றும் அழியாதாம். இனி, வேறு பொருளுருவில் கலந்து புதுப்புறத் தோற்றம் கொண்டாலும், ஆங்கு, அந்தப் பொருளின உள்ளிருந்து அந்த ஆற்றல் இயங்கும். உலக மாகவும், ஒளி பொருந்திய கதிர்களாகவும், அளவிடப் பெறுத விசும் பாகவும் உள்ளன யாவும், என்றும் வடியாமல் ஊற்றுப்போல் இருந்து கொண்டிருக்கின்ற ஆற்றலின் அலைவுத் தோற்றங்களே யாகும். (78)

3. ON POWER

Force you wipe but never destroy
In another shape it may buoy.
As life's fount world, the sun, the sky
It is as waves unseen by eye. (78)

Even when the power that effected movement of things deserts them, it is never destroyed. When it takes shape in various other objects it makes them act from within. The prennial fount that appears as waves, world, brilliant rays, the boundless sky and all such things is power.

4. மாறுதல் நிலை

விண்வளித் நீர்நிலமாய் விண்டுள் வியன்கலந்து
கண்செவிவாய் மூக்குமெய்யாய்க் கால்மாறும்—எண்புலனுக்
கெட்டா இணைமாற்றம் ஏய்ந்துணர்வார்க் கிவ்வுடற்கண்
ஒட்டா துறையும் உயிர்.

பொழிப்பு : விண், காற்று, தீ, நீர், நிலம்—என்னும் ஐம்பூதங்களாக உள்ளும் புறமும் விளங்கித் தோன்றி, வியப்புக்குரிய வகையில் தனித்தும் ஒன்றுடன் ஒன்று கலந்தும், பின், கண், செவி, வாய், மூக்கு, மெய் என்னும் ஐம்புலன்களாக அவை வழி நிலையான் மாறியும், அளவைக்கும், அறிவுக்கும் எட்டாமல் பொருந்தியியங்கு கின்ற தோற்ற மாற்றங்களை ஒன்றியிருந்து முருக உணர்கின்றவர் களுக்கு, ஊனிலையான் நின்ற உடலின் கண் உயிர் முற்றப் பொருந் தாமல் தங்கியிருக்கும். (79)

4. ON TRANSFORMATION

Sky, air, fire, water, land are five
To form eye, ear, nose, body strive;
How they form is beyond our ken;
Deep thought shows body as life's den. (79)

The sky, air, fire, water and land are the elements five that appear internally and externally and combine jointly and severally in a mysterious manner to form the eye, ear, nose, mouth and body. Those who deeply think how they transform and function in a manner that is beyond all understanding will find life solely detached from its fleshy cage.

5. ஒடுங்கல் நிலை

ஒன்றாற்றல் ஒன்றுபொருள் ஒன்றோடொன் றுட்புறமாய்
நின்றாற்றி நீங்கி நிகழ்வொடுங்கி—மன் றிருந்தே
உள்வீறி ஓங்கி உலகாய் நடந்தொளிர்தல்
கள்வீறிக் கண்டார் கணக்கு!

பொழிப்பு: ஒன்று ஆற்றலாகவும் ஒன்று பொருளாகவும் இருந்து, ஒன்றினுள் ஒன்று கலந்து, அகமாகவும் புறமாகவும் நின்று பல்வகையான இயக்கங்களைச் செய்து, பின் அவ்வியக்க நிலைகளினின்று நீங்கி, நிகழ்ச்சிகளை ஒடுக்கிக் கொண்டு, காலமாகவும் இடமாகவும் அமைந்திருந்து, பின், மீண்டும் உள்ளெழுச்சியுற்று முன் போலவே பல் வடிவாய் விளர்ந்து எழுந்து உலகமாயும், பிறவாயும் நடந்து தொடர விளங்கியிருத்தல் என்னும் உண்மை, மூளையின் முருகிய நினைவால் முகிழ்த்த மெய்ப்பொருள் இன்ப ஒழுக்கைச் சுவைத்தறிந்தவர் கூறும் அளவையறிவாகும். (80)

5. ON RECOIL

Power, object, combine, exist,
Move, part found to desist
Thrust into Time, place form to take
Shrink again as seers can e'er make. (80)

Power and object, existing separately, combine internally and externally to effect various movements. Then they desist to act, withdraw into Time and Place to spring later into

various forms, when feelings rise high, to constitute the world and its objects. This continuity is ever true. This is the logical conclusion of the mature minds that are conscious of the even flow of bliss on realisation of the Supreme Being.

பிழை திருத்தம்

'உலகியல் நூறு' பாட்டுத்தொடரில், 62-ஆம் எண் பாடலுக்குப் பெயர்ப்பாக, 63-ஆம் பாடலின் ஆங்கிலப் பெயர்ப்பையும், 63-ஆம் பாடலுக்குப் பெயர்ப்பாக 62-ஆம் பாடலின் ஆங்கிலப் பெயர்ப்பையும் இணைத்துப் படித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கின்றோம்.

பள்ளிச் சான்றிதழ்களிலே

சாதி இல்லை, மதம் இல்லை

என்று பதிந்துகொள்ள உரிமை உண்டு!

தமிழக அரசு கல்வித்துறை அரசுக் கட்டளை. (9 நிலை) எண் 1210
நாள் 2—7—1973

இடைநிலைப் பள்ளிச் சான்றிதழ் மற்றும் மாற்றல் சான்றிதழ் ஆகியவற்றில், சாதி இல்லை, மதம் இல்லை என்று குறிப்பிடவோ, அந்த இரண்டு பத்திகளுக்கும் எதிரான இடத்தை நிரப்பாமல் விட்டு விடவோ எவரும் விரும்பினால் அவ்வாறே செய்யும் உரிமையை அவருக்கு அளிக்கலாம் எனப் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் கட்டளைப்படி)

எம். கே. வி. பாலகோபாலன்
அரசுத் துணைச்செயலர்

குறிப்பு; பூண்டி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் கே. பொன்னம் பலம், கே. கோமதி ஆகியோர், தங்கள் சான்றிதழ்களில் தங்களுக்குச் சாதியோ மதமோ கிடையாது என்று பதிவு செய்ய விரும்பினார்கள். அது தொடர்பாகத் தலைமை ஆசிரியர் பள்ளிக்கல்வி இயக்குநரைக் கேட்டார்; இயக்குநர் தமிழக அரசின் கல்வித்துறையைக் கேட்டார். அதன் பேரிலேயே அரசு, 2—7—1973-இல் இந்தக் கட்டளையைப் பிறப்பித்தது. இந்தக்கட்டளை ஏனைய மதச்சார்பற்ற செய்திகள் போலவே,-சரிவரச் செயற்படாமலும் மக்களுக்குத் தெரிவிக்கப் படாமலும் மறைக்கப்பட்டு வருகிறது. அதனாலேயே இதனை இங்கே வெளியிடுகிறோம். இந்தக் கட்டளையின் படியை மீன் சுருட்டி அரசு உயர்நிலைப் பள்ளியிலிருந்து உதவியவர் அ. கருப்பண்ணன் க.மு; க.ப., அவர்கள். நடைறி-அறிவியக்கம்: இதழ்: 24

மதுரைப் பல்கலைக் கழக முதல் துணைவேந்தர்
பர். (Dr.) தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கட்கு
உலகத் தமிழ்க் கழகப் பொதுச் செயலாளர் விடுக்கும்

அறைகூவல்!

கடந்த மூவாயிரம் ஆண்டாக மறையுண்டுங் குறையுண்டும் பழியுண்டும் அழியுண்டும் வந்த, உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ், ஆங்கில ஆட்சிக் காலத்தில், ஆங்கில அறிவியற் கல்வியாலும் நடுநிலை யாட்சியாலும், தமிழ்நாட்டில் எழுந்த விழிப்புணர்ச்சியின் விளைவாக, மனோன்மணிய ஆசிரியர் சுந்தரனார் தமிழ்த்தெய்வ வணக்கமாகத் தமிழன் பள்ளியெழுச்சி பாடியபின்பும்; நிறைபுல வேந்தர் மறைமலையடிகள் செந்தமிழுஞ் சிவநெறியும தென்னிலத்தில் தோன்றிய தென்னவரின் தெளிதூய்மைச் செல்வமென்று, தம் மும்மொழி யறிவால் ஐம்பான் அருநூல்கள் எழுதிச் செம்மையா யுணர்த்திய பின்பும்; தெய்வத் திருவருளால் தெளிவுறுத்தப் பெற்ற மொழிநூல் மூதறிஞர் தேவநேயப்பாவாணர், தென் கடலில் மூழ்கிய தொல் குமரிநாடே தமிழன் பிறந்தகமென்றும், குமரி நிலத்துத் தோன்றிய குமரித் தமிழே திரவிடத்தின் தாயும ஆரியத்தின் மூலமுமாகுமென்றும், தாம் அரும்பாடு பட்டு அரை நூற்றாண்டாகச் செய்து வந்த திண்மையும் நுண்மையும் தெண்மையும் ஒண்மையும் வாய்ந்த ஒப்பியன் மொழியாராய்ச்சியால், பலநூல் வாயிலாக வலியுறுத்திய பின்பும்; தங்கள் தமிழப் பிறப்பை மறந்து குறிக்கோட் சொல்லியல் (Tendentious Etymology) தொகுதியாலேயே குமரித் தமிழை யொழிக்கப் பார்க்கும் செய்ந்நன்றிக் கொலைஞர் கொள்கையைச் சிறந்ததாகக் கொண்டு; பிற்காலத்துத் தோன்றிய இற்றைத் தமிழுக்கு உயிர்நாடியான அடிப்படைத் தமிழ் நூல்களை அளவிறந்து பிற்காலப்படுத்தியும், அடிப்படைத் தென் சொல்லையெல்லாம் வடசொல்லென்று கூறியும், முதலிரு கழக வுண்மையை முற்ற மறுத்தும், தமிழைக் காட்டிக் கொடுத்த வையாபுரியாரின் வழியைக் கடைப்பிடித்தும்; தலைக் கழகத்திற்கு முன்பே வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவர் முதன்முதலாக உயிர்மெய்க்குந் தனிவடிவு கண்டு ஒலியன் (Phoneme) முறையில் நெடுங்கணக்கு வகுத்து, எண் பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை முதல் ஈறு இடைநிலை போலி யென்னும் பத்தகமும் கிளவி புணர்ச்சி யென்னும் இருபுறமாகிய பன்னீரெழுத்திலக்கணமுந் தோற்றி, இயல் திரிவு திசை என்னும் மூவகைச் சொல்லும் முதனிலை யீறு முதலிய அறுவகைச் சொல்லுறுப்பும் தொகையும் விரியுமாகிய பதினால் வகைச் சொற்றொடரும் ஆய்ந்த தமிழ் வழங்கு நாட்டில், இவ்விருபதாம் நூற்றாண்டிலேயே ஒலியனைக் கண்ட மேலையர், கொற்றெருவில் கொணை முறிந்த ஊசியை விற்பதுபோல், வரலாற்றைத் தழுவாத வண்ணனை மொழி நூலைப் பரப்பும் முயற்சியில் ஆழ்ந்து ஈடுபட்டும்; அதனால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அழியாக் களங்கம் ஏற்படுமாறு, வங்கப் பிராமணரும் வடமொழி

வெறியருமான சுநீதி குமார் சட்டர்சியை மேற்பார்வைத் தலைவராக அமர்த்தி, மூதறிஞர் தேவநேயப்பாவாணர் அவர்களின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பைத் தடுத்தும்; குசராத்தியாரும் பேராயக் கட்சியாரும் தமிழ்நாட்டு மேனுள் ஆள் நருமான மாண்புமிகு கே. கே. சா. அவர்கள், நடுநிலையாகத் தமிழைக் கற்ருய்ந்து, தமிழே சமற்கிருதத்திற்கு மூலமென்று வாய் மொழியாகவும் கட்டுரையாகவும் துணிந்து வெளியிட்ட பின்பும், அயர்லாந்து நாட்டினின்று 1838-இல் இங்கு வந்தவரும் தமிழரின் முன்னோர் மேலையாசியாவினின்று வந்தவரென்று நம்பியவருமான கால்டுவெலார், தொல்காப்பியமும் கடைக்கழகச் செய்யுட்களும் சிலப்பதிகாரமும் தமிழ்ப் புலவர்க்குந்தெரியாது மறைந்து கிடந்ததும், மறைமலையடிகள் போலும் வழிகாட்டி இல்லாததும், குமரிநாட்டுக் கருத்துத் தோன்ருததும், தமிழர் ஆரிய அடிமைத்தனத்தில் ஆழ்ந் திருந்ததுமான இருண்ட காலத்தில், தமிழ் நாகரிகத்தின் தொன்மை முன்மையையும் அருமை பெருமைகளையும் அறியாது கூறிய சில வழுக்கூற்றுக்களைப் பெரும்பயன்படுத்திக் கொண்டு, கி. மு. 50,000 ஆண்டுகட்கு முன் தோன்றிய உலக முதல் முழுத்தூய இயன் மொழி யாகிய தமிழை, கி. மு. 1000–இற்குப் பிற்பட்ட இலக்கியக் கலவைத் திரிமொழியாகிய சமற்கிருதத்தோடு ஒப்பக் கருதி, இந்திய நாகரிகம் தமிழமென்றும் ஆரியமென்றும் பகுக்கொணுத கூட்டு நாகரிக மென்றும், தமிழ் சமற்கிருதத்திற்கு மூலமாக இருக்க முடியா தென்றும் மறுத்தும்;

ஏற்கெனவே, தமிழ வல்லினத்தை ஆரிய வல்லினத்திற்குச் சமமாகக் கொண்டும், றகரத்தின் பழைய ஒலி 't' என்றும், 'குளன்' ஒருமை, 'குளம்' பன்மையென்றும், தமிழ் எழுத்தியல்பைத் திரித்தும்; பல தமிழ்ச்சொற்களை அயற் சொற்களாகக் கூறித் தமிழ்ச் சொல் வளத்தைக் குறைத்துக் காட்டியும்; தொல்காப்பியர் காலத்தைக் கிறித்தவவூழித் தொடக்கமென்று பிற்படுத்தியும்;

முதலிரு கழகத்தோடு கடைக்கழக வுண்மையையும் மறுக்கும் தமிழிலக்கிய வரலாற்று நூலைப் பாராட்டி முன்னுரை வரைந்தும் 'மாடுக்குத் தவிடை வை' என்பது சரியென்றும், புகு பேசு படு போக்கு என்னுஞ் சொற்களின் வேர் முறையே புக், பேச், பட், போகக் என்றும் எழுதிய போலித் தமிழிலக்கண நூலிற்கு முகவுரை (Foreword) வழங்கியும்;

இவ்வாறு குமரிநாட்டுத் தமிழ்த் தோற்றத்தையும் மூக்கழக வுண்மையையும் ஒப்புக் கொள்ளாதும், தமிழியல்புகளைப் பலவாறு திரித்தும், மாணவரும் அயலாரும் மயங்குமாறும் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரும் பிறழுமாறும் செய்ததுடன், மறைமலை யடிகள் சோமசுந்தர பாரதியார், கா. சுப்பிரமணியனர், ந. மு. வேங்கடசாமி முதலிய பெருந்தமிழறிஞரொடு முரணிக்

கட்டாய இந்தியை எதிர்க்காது தொன்றுதொட்டு ஏற்றுக்கொண்டு வருவது, தமிழினத்திற்கே நாணுத் தருவதாகும்.

இம் முரண்பாடு இன்னுந் தொடரின், தமிழ் வளர்ச்சியும் தமிழர் முன்னேற்றமும் நிலையாகத் தடையுண்ணுமாதலின், இதை நிறுத்து தற்கு உலகத் தமிழ்க் கழகம் பின்வருமாறு ஒரு வழியைக் கைபாளத் தீர்மானித்துள்ளது. அது வருமாறு :—

தமிழைப் பற்றிய தங்கள் கொள்கையும் கூற்றும் உண்மை யாயின், தமிழிலும திரவிட மொழிகளிலும் சமற்கிருதத்திலும் வேதத்திலும் மேலையாரிய மொழிகளிலுந் தொன்றுதொட்டு வழங்கி வரும் 'தா' என்னும் வினைச்சொல் தமிழா? ஆரியமா? என்பது பற்றி, இன்னும் மும்மாதத்திற்குள் ஒரு கட்டுரை வரைந்து, இற்றைத் தமிழ் நாட்டு முதலமைச்சர் மாணபுமிகு ம. கோ. இராமச்சந்திரனுரைத் தலைவராகவும், மாண்புமிகு கல்வி அமைச்சர் ச. அரங்கநாயகம், கலைஞர் கருணாநிதியார், தவத்திருக் குன்றக்குடியடிகள், உரைவேந்தர் பேரா. ஔவை சு. துரைசாமி, பெரும்புலவர் சிந்தாமணிச்செல்வர் மே. வீ. வேணுகோபாலனுர், வரலாற்று ராய்ச்சியாளர் மயிலை சீனி. வேங்கடசாமி, அனைத்துலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் பர். ச. வே. சுப்பிரமணியம் ஆகிய எழுவரை உறுப்பினராகவுங் கொண்ட குழுவின்முன் படைத்தல் வேண்டும்.

மொழி யாராய்ச்சியாளர் ஞா. தேவநேயப்பாவாணர் 'தா' என்னும் வினைச்சொல் தென்சொல்லே யென்று ஒரு கட்டுரை வாயிலாக நாட்டுவார். தாங்கள் அதை வடசொல்லென்று கொள்ளின், அவர் கூற்றை மறுத்தல் வேண்டும்.

குழுவாரின் பெரும்பான்மை முடிபே உலகமெங்கணும் நிலை யானதாக ஒப்புக் கொள்ளப்பெறும்.

தாங்கள் அச்சொல்லைத் தென் சொல்லென்று ஒப்புக் கொள்ளின் கட்டுரை வரைய த் தேவையில்லை. தாங்கள் மறுக்காது உடன்படினும், மறுத்துத் தோல்வியுறினும் இனிமேல் தமிழுக்கு மாருகப் பேசுவதை யும் எழுதுவதையும் அடியோடு நிறுத்திவிடல் வேண்டும். இஃதொடு தமிழ்நாட்டில் தமிழாரியப் போராட்டம் வரையறவாய் நின்றுவிடல் வேண்டும். காலம், உலகம், பால் (பகு + அல் = பகல்—பால்), தெய்வம், பூதம் (தொல். கிளவி. 58) முதலிய நூற்றுக்கணக்கான அடிப்படைச் சொற்கள் வேதத்திலும் சமற்கிருதத்திலும் வழங்குவ

தால், இச்சொல்லை ஒப்புக் கொள்ளின், ஏனையவற்றையும் ஒப்புக் கொண்டது போலாம். "ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு பருக்கையே பதம்." இதனால், தமிழின் முன்மையும் முதன்மையும் மூலத்தன்மையும் அறுதியும் இறுதியும் உறுதியுமாக நாட்டப்பெற்றுவிடும்.

தமிழ் வாழ்க! தமிழ் எதிர்ப்பு வீழ்க!

உ. த. க. தலைமையகம்
சென்னை-600 016
தி. பி. 2008 மடங்கல் 24

—இறைக்குருவன்
உ. த. க. பொதுச் செயலாளர்

உலகத் தமிழ்க் கழக மாநாட்டு மலர் வெளியீடும், விளம்பர வேண்டுகோளும்.

அன்புடையீர்! வணக்கம்.

உலகத் தமிழ்க் கழகத்தின் 4-ஆவது பொது மாநாட்டில் மலர் ஒன்று (crown 1 × 4 size) வெளியிட ஆவன செய்து வருகின்றோம்.

இம்மலரில் தலைசிறந்த தமிழ்ப் பேரறிஞர்கள், மற்றும் பல்துறை வல்லுநர்களின் கருத்தோவியங்கள் அணிசெய்கின்றன. உள்நாடு, வெளிநாடுகளில் பெரிதும் தமிழ்மணம் பரப்பும் இம்மலரில் தங்கள் விளம்பரம் இடம்பெற வேண்டுமென்று விரும்புகின்றோம்.

தாங்கள் அன்பு கூர்ந்து தங்கள் விளம்பரத்தை வழங்கி மலர் சிறப்புற ஆதரவு தருமாறு வேண்டுகின்றோம்.

விளம்பரக் கட்டணம்

அட்டை	4ஆம் பக்கம்	(இருவண்ணம்)	உரு	200 00
,,	3 ,,	,,	,,	150 00
உள்ளே	முழுப்பக்கம்	(ஒருவண்ணம்)	,,	100 00
,,	அரைப்பக்கம்	,,	,,	55 00
,,	காற்பக்கம்	,,	,,	30 00

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்

—என்பது பற்றி விரிவும் விளக்கமும் வாய்ந்த நெடிய மருத்துவ இயல் கட்டுரை, தென்மொழியில் விரைவில் தொடர விருக்கின்றது.

உடனே நீங்கள் உறுப்பினராகிக் கொள்ளுங்கள்.

புதிய தமிழக அரசு எல்லா விளம்பரப் பலகைகளிலும் செப்டம்பர் முதல் பக்கலுக்குள் தமிழில் எழுதவேண்டுமெனக் கட்டளை பிறப்பித்தது. ஆனால் அது செயல் முறைக்கு வரவில்லை. உடனே செயல்படுத்துமாறு அரசினைத் தூண்ட வேண்டும். இந்தியினை எவ் வகையிலும் தமிழகத்தில் நுழைக்க வேண்டுமென நடுவண் அரசு பல வழிகளிலும் முயன்று வருகிறது. இந்த நிலையில் தங்களைப் போன்ற துணிவுடைய தலைவரால்தான் வன்மையாக எதிர்க்க இயலும்—சுட்டிக்காட்டி நிறுத்த இயலும். தங்கட்குத் துணையாக நாங்கள் தங்கள் பின்வர அணியமாக உள்ளோம்!

—பாவலர். கருமலைத்தமிழாழன்—தருமபுரி-2.

0:541; பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு. வணக்கம். தாராபுரத்திற்குத் தங்களை அழைக்கவேண்டும் என்ற என்னுடைய நெடுநாளைய அவா கடந்த (21—8—77) மடங்கல் ரு-ஆம் பக்கல் நிறைவெய்தியது. ஆனால், நிகழ்ச்சி ஏற்பாட்டில் புகுந்து கொண்ட குறைகள் முழுமையான மனநிறைவை அளிக்கவில்லை, குறிப்பாகப் பாட்டரங்கினை விழா ஏற்பாட்டாளர்கள் தவிர்த்தே இருக்கலாம் என்ற எண்ணமே எனக்கிருந்தது. பாட்டரங்கத் தலைமை, முடிப்புரைகளில் பாட்டரங்கத் தலைப்பினைச் சார்ந்த எக்கருத்தினையும் பாட்டரங்கத் தலைவர் குறிப்பிடவில்லை, காலமின்மை ஒன்றுதான் அதற்கான கரணியம் என்று ஆர்வலனாகிய என்னால் கருதமுடிய வில்லை, தவிர, நான் சுவைஞர்களோடு சுவைஞனாய் அமர்ந்திருந்தேன். பாட்டரங்கத் தலைவர் தங்களோடு மேற்கொண்ட சுற்றுப்போக்கி-லேயே காலத்தைப் போக்கிவிட்டு அணியமாக வாராததும், இதற் கேற்ப, பங்குகொண்ட பாவலர்களில் முதலாமவர், தாம் வந்த கரணியத்தையே மறந்து, அவையோரைத் தம் இனிய இசையால் மயக்குறச் செய்வதையுமே முகாமையாகக் கொண்டிருந்ததும் குறிப் பிடத்தக்கன; கண்டிக்கவும் தக்கன. இறுதியாகப் பட்டிமன்ற நிகழ்வு மிகச் சிறப்பாகவும் செப்பமாகவும் அமைந்திருந்தாலும், 'பிற மொழிக் கலப்பால் தமிழ் நலிவுறும்' என்பதை இதுபோன்ற பட்டிமன்றங்களில், பார்வையாளர்கள் உள்ளத்திற் பதியுமாறு, தக்கபடி எடுத்துரைக்கும் குழுக்குழுவாய், அணியணியாய் நம்மைநாம் அணியமாக்கிக்கொள்ள வேண்டும். ஏனெனில் நம்மைப்பற்றி அறியா மக்களைப் பார்த்து, வெறும், இலக்கிய, தொல்கதைப் போர்வைக்குள்ளே நாம் முடங்கிக் கிடக்கின்றோம் என்று, நம்மீது குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்யக் கலப்பாளர்கள் தவறுவதே இல்லை. அத் திசைதிருப்புக் கருத்துகளுக்கு மட்டும் விடையளித்துக் கொண்டிராமல், நமக்கும் மாந்தனைப் பற்றிய நினைவுகளே மிகுதி, குமுகாய நலமே பெரிது, இனநலமே முகாமை யானது எனத் தகரிமுழக்காய் முழங்கிக் காட்டத் தவறுவோமே யானால், வயிரங்களை அள்ளிக்கொண்டு போகவேண்டியவர்கள், வெறுங் கண்ணாடிக் கற்களையே அள்ளிப் போய்க் கொண்டிருப்பர். அதற்குத் தக, நம்முடைய போர்வாளாந் தென்மொழியில், தனி மாந்தத்தேவைகளை நோக்கிய படைப்புகளும் மிகுதியாக இடம்பெறச் செய்தல் வேண்டுகின்றேன்.

மற்றொன்று, தாராபுரத்திற்குத் தாங்கள் வருகைதந்து ஆற்றிய வுரைகளால், கலப்பாளர் உள்ளங்களை ஓர் உலுக்கு உலுக்கிக் கலக்கி விட்டீர்கள்! இப்படியோர் அறைகூவலே இல்லை என்று இங்கு எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகவும் இருந்தது. அதற்காக என் பணிவார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்ளுகின்றேன். தாங்கள் நலமேயாயின் நாங்களும் நலமே.

அன்பிற்கலந்த,—பா. அறவாழி. போழறப்பட்டி. உடுமலை மா. வ.

0:542; தண்டமிழாசானுக்கு எம் தலைதாழ்ந்த வணக்கங்கள், தாங்கள் கடந்த மடங்கல்-அ (24—8—77) ஆம் பக்கம் கோபி சிந்தனையாளர் மன்றப் பொதுக் கூட்டத்தில் நிகழ்த்திய உரை எழுச்சி மிக்கது; ஏற்றமிக்கது. வாரிகளும், பூரிகளும், மடத்தலைவர்களும், மொழிப் பகைவர்களும் வந்து தங்களது 'தேவபாடை' கலந்த

நடையில் மொழிக்கொலை செய்து அடிமைத் தமிழர்களை மீண்டும் மீண்டும் அறியாமைப் படுகுழியில் தள்ளிக்கொண்டிருக்கும் வேளையில் இனமீட்பராகிய தாங்கள் வந்து உரை நிகழ்த்தியது கோபிசெட்டி பாளையத்தின் பெரும்பேறே! 'பிராமணன், என்று ஒருவனை அழைக்கும் வரை சூத்திரன் இருந்தே தீர்வான்.' 'தமிழில் ஓதினால் புரிந்து கொள்ள மாட்டாத தேவன் நமக்குத் தேவையில்லை.' 'பாரதப் பாஞ்சாலி, இராமாயணச்சீதை இருவர்தம் கற்பை நிலைநாட்டப் பட்டிமன்றம் தேவையில்லை'. போன்ற தங்களது கருத்து முத்துகள் அனைவரையும் ஈர்த்துள்ளன. வெளி நாட்டுத் தமிழர்களில் குறிப்பாக ஈழத்துத் தமிழர்களின் நிலைமைகளும், தமிழர் தமக்குத் தாமே உட்பகைவர் களாய் இருந்துவரும் இழி நிலைகளும், மொழிப் பற்றில்லா மூங்கைய ராய் இருக்கும் தமிழினமாந்த, மேம்பாட்டுக் கருத்துகளும் தங்கள் வாயிலாகக் கேட்கப்பெற்ற பிறகே கோபி நகர, வட்டார மக்களின் போக்கில் ஒரு மாற்றம் தொடங்கியிருக்கிறது.

"அறிவு நினைவு" இல்லாத தமிழனுக்கு அறிவு கொளுத்தி, நேற்று என்பது வரலாறு, இன்று என்பது வாழ்க்கை, நாளை என்பது வளம் என்று தாங்கள் சுட்டிக்காட்டிய பின்னரே கற்ற, கல்லாத அனைவரிட மும் ஒருவகை விழிப்புணர்ச்சி நிலவுகிறது. இத்தகைய நல்ல சூழல்களை உருவாக்கிக் கொடுத்து விட்டீர்கள். இனி, அடுத்த தங்களது கோபி வருகை 'தமிழ்ப்பெயர்ப்படுத்த விழாவே' என்பதில் ஐயமில்லை! தென்மொழிப் பரப்புதலில் முடுக்கமும், முனைப்பும் காட்ட ஏந்தான நிலைமைகள் தோன்றிவிட்டன. நல்ல விதைகளை ஊன்றிவிட்டீர்கள்! விளைச்சலுக்குக் காவலாய் கூவலூர் திருவள்ளுவர் மன்றம், கோபி தமிழ் வட்டம், கோபி சிந்தனையாளர் பேரவை இவை இணைந்து செயல்படப் போகின்றன. இனி அறுவடை யைப் பற்றிக் கவலைப் படுவானேன்!

—பாரி மணியம், புலவர். வில்லவன். க.மு. தலைவர். திருவள்ளுவர் மன்றம். கூகலூர்,

0:543; அன்பார்ந்த ஐயா அவர்களுக்கு வணக்கம். தாங்கள் விடுதலையான செய்தியைத் தென்மொழி சுவடி 13 ஓலை: 8–12 மூலம் அறிந்து மகிழ்ச்சியுற்றேன். தமிழர்களுக்கு, தமிழுக்கு ஒரு விடிவுக் காலமே இல்லையா? என்று ஏங்கிக் கொண்டிருக்கும் என்னைப்போன்ற தனித்தமிழில் ஆர்வமுள்ளவர்களுக்கு, அக்கறையுள்ளவர்களுக்குத் தங்கள் விடுதலை மன ஆறுதலைத் தருகிறது. தாய்மார்கள் கூறுவது போல் 'வயிற்றில் பாலை வார்த்தது போல்' உள்ளது. இனி, தென் மொழி தொடர்ந்து வரும் என்றும் அறிந்தேன், மட்டற்ற மகிழ்ச்சி. மறைமலையடிகள் உண்மையை எவ்வளவு எடுத்துக்காண்பித்தும் அவர் வழி நிற்கும் பாவாணர் தம் மொழி நூல் ஆராய்ச்சி மூலம் எவ்வளவு எடுத்துச் சொல்லியும், பல இன்னல்களுக் கிடையில் தங்கள் அயராத உழைப்பால் எவ்வளவு எடுத்துச்சொல்லியும், திருந்தாத, உண்மையை அறியாத-தமிழர்கள் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்றிருக்கும் இவர்கள்-என்று தான் மனந்திரும்பி மானமுள்ளதமிழர்க ளாக வாழப் போகிறார்களோ?

எனக்கு, இங்குள்ள ஒரு சில தமிழர்களைத் திருத்துவதே (ஒன்று படுத்துவதே) எவ்வளவு இன்னல்தருவதாய் உள்ளது என்கின்றபோது, நாலரைக் கோடித்தமிழர்களைத் திருத்தித்தமிழர்களாக வாழப்பாடுபடும் தங்களின் நிலையை எப்படியெடுத்துரைப்பது? உங்கள் உழைப்பிற்கு பலன் கிடைக்காமல் போகாது. வாழ்க தங்கள் நலம்! ஓங்குக தமிழர்களின் எழுச்சி! —பெ. மணியரசன், மேற்கு செருமனி.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005: (தமிழகம்)